
லஞ்ச ஊழல் விழிப்புணர்வு ®

# மக்கள் விசாரணை

ஆண்டு-6 இதழ்-9 பிப்ரவரி-2018 மாதஇதழ் விலை ₹ 10/-

makkalvisaranai@facebook twitter



# கமல்

விஸ்வரூப

# பயணம்

# apple Printers

ஆப்பிள் பிரிண்டர்ஸ்




- We Create Logos
- Business Cards
- ID Cards
- Magazine
- Books
- Graphics Elements

and anything




No. 177/94-95, Soda Compnay Lane, Triplicane, Chennai - 600 005.
Email : appleprintersam@gmail.com / web. www.makkalvisaranai.com
Cell : 93821 33344, 93821 44446

## தலையங்கம்

அன்பாய்
அனைவரும்
ஒன்றிடுவோம்
பண்பால் உயர்ந்து
பயன்பெறுவோம்
தெம்பாய் உலகை
எதிர்கொள்வோம்
துன்பங்கள் யாவையும்
வென்றிடுவோம்
எங்கும் நிறை இறைவனை
போற்றிடுவோம்
இன்பங்கள் யாவையும்
பெற்றிடுவோம்

# தொடர் கதையாகும் சுமைகள்

ஊழியர்களுக்கு முறையாக ஊதிய உயர்வு கூட அளிக்க முடியாத நிலையும் ஒய்வு பெறும் ஊழியர்களுக்கு சேர வேண்டிய பணிக் கொடை, ஒய்வூதியம் உள்பட எதையும் வழங்காமல் கடந்த 7 ஆண்டுகளாக நிலுவையில் வைத்திருந்தது பெரும் அத்துமீறல். பஸ் ஊழியர்கள் போராடியதும் கோர்ட் தலையிட்டு உத்தரவுகளை பிறப்பித்துள்ளது. தொடர்ந்து நிர்வாகக் கோளாறு காரணமாக பொது போக்குவரத்து மிகவும் மோசமான நிலையில் தமிழகத்தில் உள்ளது.

கடந்த 2011ம் ஆண்டில் அதிமுக ஆட்சிக்கு வந்ததும் பஸ் கட்டண உயர்வை அறிவித்தது. சுமார் 50 சதவீதம் என்ற அளவுக்கு கட்டண உயர்வு இருந்தது. 6 ஆண்டுகளுக்கு பிறகு தற்போது மீண்டும் கட்டண உயர்வு 110 சதவீதம் வரையில் உயர்த்தப்பட்டுள்ளது.

அதாவது ரூ.13க்கு வாங்கிய டிக்கெட் இப்போது ரூ.27. தமிழ்நாட்டில் தினமும் 88.64 லட்சம் கி.மீ. தூரம் அரசு பஸ்கள் இயக்கப்படுகின்றன. தினசரி அரசு பஸ்களில் சுமார் 2.02 கோடி பேர் பயணம் செய்கின்றனர். பொதுமக்களுக்காக மொத்தம் 22,509 பஸ்கள் இயக்கப்படுகின்றன. இந்த போக்குவரத்து கழகங்களில் மொத்தம் 1,40,615 ஊழியர்கள் பணியாற்றுகின்றனர். ஆனால், போக்குவரத்து கழகங்களை நிர்வகிப்பதில் முறைகேடுகளும், ஊழலும் மலிந்துவிட்டது; ஓட்டை உடைசல் பஸ்கள், ஊழியர் பற்றாக்குறை, ஊழியர்களிடம் பிடித்தம் செய்யப்படும் இன்சூரன்ஸ், வருங்கால வைப்பு நிதி உள்பட பல்வேறு நிதியை வேறு பணிகளுக்கு பயன்படுத்தியது ஆகியவை அரசு செய்த அடுத்தடுத்த தவறுகள்.

மக்களுக்கு சுமையை ஏற்படுத்தி உள்ள பஸ் கட்டண உயர்வுக்கு மற்ற மாநிலங்களுடன் ஒப்பிட்டு அறிக்கை விடுப்பதற்கு பதில் கட்டண உயர்வை மறுபரிசீலனை செய்து குறைக்க வேண்டும். அதேவேளையில், பழுதான பஸ்களை இயக்குவதை உடனடியாக நிறுத்த வேண்டும். உரிய வசதிகளுடன் பேருந்து நிலையங்கள், பஸ்களில் கூடுதல் வசதிகளை செய்து கொடுப்பதை உறுதி செய்ய வேண்டும். இல்லை என்றால் மக்களின் எதிர்ப்பை சந்திப்பதில் இருந்து அரசு தப்பாது.

ஒரு பக்கம் மத்திய அரசின் ஆதரவுடன் எண்ணெய் நிறுவனங்கள் தங்களது மனம்போன போக்கில் பெட்ரோல், டீசல் விலையை உயர்த்துகின்றன. இதனால் அனைத்து தரப்பு மக்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதுபோதாது என்று ரயில்வேயும் கட்டணத்தை உயர்த்த திட்டமிட்டுள்ளது. மேலும், சிறப்பு கட்டண ரயில்கள் என்ற பெயரில் கொள்ளை கட்டண ரயில்களை இயக்குகிறது. இந்த நிலையில் மாநில அரசு தனது பங்கிற்கு பஸ் கட்டண உயர்வை அமல்படுத்தி உள்ளது. இப்படி ஒரு பக்கம் என்று இல்லாமல், எல்லா பக்கத்திலும் மக்கள் அடிகளை வாங்கிக் கொண்டிருக்கின்றனர். அதிரடியாக 110 சதவீதம் வரையில் பஸ் கட்டண உயர்வு என்பது பொதுமக்களின் தலையின் மேல் நேரடியாக வைக்கும் பொதிமூட்டை சுமை போல் உள்ளது. இதைத் தொடர்ந்து அத்தியாவசியப் பொருட்களின் விலையும் உயரும் என்பதில் சந்தேகம் இல்லை.

அரசு பஸ், மருத்துவமனை, குடிநீர் போன்ற சேவைகளை செய்வது, மக்கள் நலன் சார்ந்தது என்பதால் தான். ஆனால், அரசும் ஏதோ தனியார் நிறுவனம் போல வருவாய்க்காக எல்லா சேவைகளையும் மக்கள் மீது சுமையாக திணிப்பது வாடிக்கையாகி விட்டது. பஸ் கட்டண உயர்வு, ஏழை மக்கள் வாழ்வாதாரத்தை முடக்கிப்போடும் சுமை என்பதை அரசு உணருமா? இல்லை சுமை என்பது தொடர்கதையாகி விடுமா? என்பதுதான் இடியாப்ப சிக்கலாக இருக்கிறது.

- ஆசிரியர்

# வேலைவாய்ப்பு பெற என்ன செய்ய வேண்டும்?



நாட்டில் 5.4 கோடிக் குடும்பங்கள் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களைக் கொண்டவை. அந்தக் குடும்பங்களில் சராசரியாக 5 உறுப்பினர்கள் இருப்பதாகக் கருதினால் அவர்களின் எண்ணிக்கை சுமார் 25 கோடி. கிராமங்களில் வசிப்போர் எண்ணிக்கை சுமார் 85 கோடி முதல் 90 கோடி வரை. இந்த எண்ணிக்கையே குறைந்த மதிப்பீடுதான். காரணம், நிலம் வைத்திருப்பவர்களில் கூட 84% சிறு, குறு விவசாயிகள்.

நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களின் குடும்பங்களில் வேறு எந்த ஆறு பின்னடைவுகள் சேர்ந்தாலும் அவர்களுடைய வாழ்க்கை மிகவும் துயரகரமாக மாறிவிடுகிறது. நன்றாகக் கட்டப்படாத வீடுகளில் வசிப்பவர்கள் 59% நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள். 55% குடும்பங்களில் படித்த, 25 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் இல்லை, தலித் மற்றும் பழங்குடிகளின் குடும்பங்களில் தலா 54%-ல் வயதுவந்த ஆண்கள் இல்லாமல் பெண்களே குடும்பத் தலைவர்களாகவும் நிலமற்றவர்களாகவும் இருப்பவர்கள். 47% குடும்பங்களில் வயது வந்த ஆண்களும் இல்லை, நிலமும் இல்லை. 45% குடும்பங்களில் மாற்றுத் திறனாளிகள் உள்ளனர், அதே சமயம் உடலுழைப்பில் ஈடுபடக்கூடிய ஆண்கள் இல்லை.

நிலமற்றவர்களின் குடும்பங்கள் மட்டுமல்ல சிறு, குறு விவசாயிகளின் குடும்பங்களும் பரம ஏழைகளாகிவருகின்றன. 1970-களில் விவசாயிகளின் சராசரி நிலவுடமை 2.25 ஹெக்டேராக இருந்தது 2010-ல் 1.25 ஹெக்டேராக சுருங்கியிருக்கிறது. இது மேலும் குறைந்துவிட்டிருக்கும். இவர்களுக்கு விவசாயத்திலிருந்து கிடைக்கும் வருமானமும் குறைந்திருக்கும். எனவே விவசாயத்தை விட்டே விலக நேர்ந்திருக்கும். விவசாயிகளின் துயரம் வளர்ந்துகொண்டே வருகிறது, கடந்த ஆண்டு பல மாநிலங்களில் விவசாயிகள் தங்களுடைய கோரிக்கைகளுக்காக வீதியில் இறங்கிப் போராடினார்கள்.

தேசிய மாதிரி கணக்கெடுப்பு (என்.எஸ்.எஸ்.) அமைப்பு, கல்வி, மதம், இனம், தேசிய அடையாளம் அடிப்படையில் எடுத்த கணக்கெடுப்பில், இரண்டுவித மக்கள் குழுக்கள் 2004-05 முதல் 2011-12 வரையில் அதிக ஊதியமும் தொடர் வேலைவாய்ப்பும் பெற்றது தெரியவந்துள்ளது. ஒரு குழு நன்கு படித்த இளைஞர்கள்; அதிக படிப்பில்லாத, நிலமும் இல்லாத தொழிலாளர்களும் கட்டுமானத் தொழில்களில் இக்காலகட்டத்தில் அதிக வேலைவாய்ப்புகளைப் பெற்றனர்.

நாட்டிலுள்ள மொத்த கிராமக் குடும்பங்களில் 48.5%-ல் மேலே கூறியவற்றில் ஏதாவது ஒரு பின்னடைவு நிலவுகிறது. சொந்த நிலமில்லாத குடும்பங்களில் உடல் உழைப்பில் ஈடுபடுகிறவர்களின் நிலைமை மோசமாக இருக்கிறது.

அடுத்த பத்தாண்டுகள் முதல் 2030 வரையில் வேகமாக வளரக்கூடிய இவ்விரு குழுக்களுக்கும் வேலை அளிக்கக்கூடிய வகையில் பொருளாதாரம் வளருமா என்பதே இப்போதைய கேள்வி. கடந்த இருபதாண்டுகளாக இதுவரை இருந்திராத வகையில் ஏராளமான இளைஞர்கள் கல்வி நிலையங்களில் சேர்ந்து படித்துக்கொண்டிருக்கிறார்கள். 2004-05 முதல் 2015-16 வரையில் ஆண்டுக்கு இருபது லட்சம் புதிய தொழிலாளர்கள் வேலை தேடி சந்தைக்கு வருகின்றனர்.

கட்டுமானத் துறையில் வேலைவாய்ப்புகள் அதிகரித்ததால் 15 வயது முதல் 29 வயது வரையிலானவர்கள் வேலைவாய்ப்பு பங்களிப்பு 2004-05-ல் 7.5% ஆக இருந்தது 14% ஆக இரட்டிப்பானது. கட்டுமானத் துறையில் புதிய வேலைவாய்ப்புகளில் தொய்வு ஏற்பட்டதால் இளைஞர்களின் பங்களிப்பு 13.3% ஆக சரிந்தது. 2011-12-க்குப் பிறகு இத்துறையில் புதிய வேலைவாய்ப்புகள் உருவாவது மேலும் மந்தமடையத் தொடங்கியது. வங்கிகளின் வாராக்கடன் அதிகரிப்பாலும் அரசின் பொது முதலீடு குறைந்ததாலும் வேலைவாய்ப்பு குறையத் தொடங்கியது.

இதனால் 2004-05 முதல் 2011-12 வரையில் விவசாய வேலையிலிருந்து 50 லட்சம் பேர் வெளியேறினர். 2011-12 முதல் 2015-16 வரையில் இது ஆண்டுக்கு 10 லட்சமாகக் குறைந்துவிட்டது.

கிராமப்புறங்களில் மக்களின் ஏழ்மை நிலையை வரையறுக்க இந்தக் கணக்கெடுப்பு ஏழு குறியீடுகளைப் பயன்படுத்துகிறது. சரியா கக் கட்டப்படாமல் பெயரளவுக்கு ஓலை வேய்ந்தோ, மண் சுவர் எழுப்பியோ கட்டப் பட்ட வீடு, உழைக்கும் வயதில் ஆண் ஒருவரும் இல்லாமல் - குடும்பத்துக்குப் பெண் தலைமை தாங்குவது, மாற்றுத்திறனாளி உள்ள வீடு அல்லது வேலைசெய்யும் அளவுக்கு உடல் வலு இல்லாத ஆடவரைக் கொண்ட வீடு, பட்டியல் இனத்தவர் - பழங்குடிகள் வீடு என்று பலவாறாக இது பிரிக்கப்பட்டுள்ளது.



இந்தக் குறியீடுகள் ஒரே குடும்பத்தில் ஒன்றுக்கும் மேல் இருந்தால் அந்தக் குடும்பத் தின் வறுமை அதற்கேற்பத் தீவிரமாகவே இருக்கும். 30% கிராமப்புற குடும்பங்களில் மேலே சுட்டிக்காட்டியவற் றில் இரண்டு பின்னடைவுகள் இருக்கின்றன. 13% குடும்பங்களில் மூன்று பின்னடைவுகள் இருக்கின்றன. 0.01% குடும்பங்களில் மேலே பட்டியலிடப் பட்ட ஏழு பின்னடைவுகளும் இருக்கின்றன.

2018-19-ம் ஆண்டுக்கான பட்ஜெட் இந்தப் பொது முதலீட்டு முயற்சியைத் தொடர வேண் டும். இம்மாதிரியான செலவுகளுக்காக மத்திய அரசு கூடுதலாக ரூ.50,000 கோடியைக் கடனா கத் திரட்டப் போகிறது என்ற தகவல் வரவேற் கத்தக்கது. அடித்தளக் கட்டமைப்புத் துறையில் அரசின் முதலீட்டை அதிகரிப்பதுதான் இதன் முக்கிய நோக்கமாக இருக்கும்.

இது நிலமற்ற விவசாயத் தொழிலாளர் களையும் சிறு - குறு விவசாயிகளையும் பெரு மளவில் பாதித்திருக்கிறது. கட்டுமானத் துறை யில் புதிய வேலை கிடைத்ததாலும் விவசாய வேலைக்குப் போட்டி போடுவோர் எண்ணிக் கைக் குறைந்ததாலும் தொழிலாளர் களுக்கு வேலையும் கிடைத்தது, ஊதிய மும் உயர்ந்தது. கட்டுமானத்துக்குத் தேவைப்பட்ட சில சாதனங்களை அமைப்பு ரீதியாகத் திரட்டப்படாத சிறு, நடுத்தரத் தொழில் பிரிவுகள் தயாரிக்க வேண்டியிருந்ததால் அவற்றிலும் வரு மானமும் வேலைவாய்ப்பும் அதிகரித்தது.



மத்திய அரசு கடந்த இரண்டு ஆண்டு களாக ஊரக வளர்ச்சிக்கான செலவைத் தொடர்கிறது. அதிலும் குறிப்பாககிராமப் புற சாலைகள் அமைப்புப் பணி 'பிரதான் மந்திரி கிராம சடக் யோஜனா' என்ற பெயரிலும், கிராமப்புற வீடமைப்புப் பணிகள் 'பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா' பெயரிலும் மேற்கொள்ளப் படுகின்றன.

**- வீ. சிவசங்கர்**



# தமிழகம் எப்போது முதலிடம் பெறுவது?

கடந்தாண்டு இந்தியாவிற்கு சுற்றுலா வந்த பயணிகளால் கிடைத்த வருமானம் ரூ.2 லட்சம் கோடி. சுமார் 1 கோடி பேர் இந்தியாவுக்கு கடந்த ஆண்டு சுற்றுலா வந்துள்ளனர். இதனால் 2013ல் உலக சுற்றுலா பயணிகளின் விருப்ப பட்டியலில் 65வது இடத்தில் இருந்த இந்தியா 2017ல் 25வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

நாட்டின் வளர்ச்சி விகிதத்தில் 6.88 சதவீதம் சுற்றுலாத்துறை மூலம் கிடைத்துள் ளது. மேலும் 12 சதவீத வேலைவாய்ப்புகள் உருவாகி உள்ளன. அசாம், மேகாலயா, நாகா லாந்து, மணிப்பூர், அருணாச்சலப்பிரதேசம், மிசோரம், திரிபுரா ஆகிய வடகிழக்கு மாநிலங் கள் சர்வதேச சுற்றுலா பயணிகள் விரும்பி பயணிக்கும் மாநிலங்களாக அமைந்துள்ளன.

தமிழகம் இயற்கை எழில் மிகுந்தது. ஒரு பகுதி முழுவதும் கடல் பகுதியால் சூழப் பட்டது. பாரம்பரிய மிக்க கட்டிடங்கள், கலைகள், நூற்றாண்டு பழமையான, கட்டிடக் கலைக்கு பெயர் பெற்ற கோயில்கள் இடம் பெற்ற பூமி. ஆனால் தமிழகத்தில் சுற்றுலா வளர்ச்சி எந்த அளவில் உள்ளது?. உலகத்தரம் வாய்ந்த சுற்றுலா தலமாக தமிழகத்தை மாற்ற எடுத்த நடவடிக்கைகள் என்ன வென்றால், கொஞ்சம் வருத்தமாகத்தான் உள்ளது. தமிழ கத்தில் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை அதிகம் கவரும் இடத்தில் முக்கியமானது கன்னியாகுமரி. இங்கு திருவனந்தபுரம் விமானநிலையம் வழியாக சுற்றுலா பயணிகள் வருவதால் கேரள மாநிலம் அதிக வருவாய் பெறுகிறது. எனவே கன்னியாகுமரியிலோ அல்லது முன்பு திட்டமிடப்பட்ட நாங்குநேரி பகுதியிலோ விமானநிலையம் அமைக்கப்பட் டால் கூடுதல் வருவாய் அரசுக்கு கிடைக்கும்.

அதே போல் பண்டிகைகள் அதிகம் கொண்ட நாடு நம் நாடு. இந்த பண்டிகை காலங்களில் தமிழகத்தின் தலைநகர் சென்னை யில் இருந்து தென்மாவட்டங்களுக்கு செல்வது மிகவும் கடினமான ஒன்று. ஆம்னி பஸ் கட்டண கொள்ளை, பிரிமியம் ரயில் கட்டண கொள்ளை எல்லாவற்றையும் தாண்டி பர்சை காலி செய்துவிட்டுத்தான் பண்டிகை கொண் டாட சொந்த ஊர் செல்ல வேண்டியது உள்ளது.

சவுதி பயணத்திற்கு கூட இப்போது 4 முதல் 5 மணி நேரத்தில் செல்லக்கூடிய அளவில் படகு வசதி உள்ளது. இதற்கான ஒப்பந்தத்தில் இந்திய அரசு கையெழுத்திட்டுள்ளது. அதே போல் தமிழகத்திலும் சென்னை முதல் குமரி வரை செல்லக்கூடிய அளவில் பயணிகள் படகு போக்குவரத்தை ஊக்குவிக்கும் பட்சத்தில் தமிழகம் இன்னும் வளர்ச்சி அடையும். அதே



போல் கடற்கரை வழியாக எளிதாக சரக்கு போக்குவரத்தையும் மேற்கொள்ளலாம். மேலும் கடற்கரை வழியாக சென்னை முதல் குமரி வரை தண்டவாளம் அமைத்து ரயில் போக்குவரத்து தொடங்கினால் சுற்றுலா வருமானம் இன்னும் அதிகமாக தமிழகத்திற்கு வந்து சேரும்.

எந்த வழியில் வருவாய் பெருக்கலாம் என்ற ஆலோசனையில் உள்ள தமிழக அரசு சுற்றுலா திட்டங்களில் அதிக முதலீடு செய்து வருவாய் பெருக்க முயற்சிக்க வேண்டும். குறிப்பாக நீண்ட நெடிய கடற்பரப்பை கொண்ட நமது மாநிலத்தில் கடல் போக்குவரத்து மற்றும் அதனை சார்ந்த விளையாட்டு மற்றும் உணவு பூங்கா போன்ற தொழில்களை தொடங்கினால் சுற்றுலா வருமானத்தில் தமிழகம் எப்போதும் முதலிடம் பெறுவது மட்டுமல்ல, சர்வதேச அளவில் சுற்றுலா பயணிகளை ஈர்க்கக்கூடிய மிகப்பெரிய வாய்ப்பையும் பெறும் என்பதில் சந்தேகம் இல்லை.

\- பிரவீன்


**விளம்பரக் கட்டணம்**

| | |
|---|---|
| முழு பக்கம் கலர் பின் பக்கம் அட்டை | ரூ. 20,000 /- |
| முழு பக்கம் கலர் பின் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| முழு பக்கம் கலர் முன் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| அரை பக்கம் கலர் | ரூ. 8,000 /- |
| முழு பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 9,000 /- |
| அரை பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 5,000 /- |

**மக்கள் விசாரணை**

எண். 7/13, பொன்மனச் செம்மல் தெரு, எம்.ஜி.ஆர். நகர்,
சென்னை - 600 078. Email : news@makkalvisaranai.com
Cell : 93821 33334, 93821 44446



# என்ன தவறு செய்தேன்?

திமுகவுக்கு மாற்று ஸ்தாபன காங்கிரஸ் என்பதை எம்.ஜி.ஆர். முடித்து வைக்கப் போவதை காமராஜர் தொடக்கத்திலேயே புரிந்துகொண்டார். திமுகவினரும் எம்.ஜி. ஆரைக் குறைத்தே மதிப்பிட்டனர்.

கருணாநிதியின் மாநில சுயாட்சித் தீர்மானம், தலைமைப் பண்புகளைச் சகித்துக் கொள்ள முடியாத இந்திரா காங்கிரஸ் ஆட்சி, திமுகவை வீழ்த்தும் ஒரு கருவியாக எம்.ஜி. ஆரைப் பயன்படுத்திக்கொண்டது. அவர் கேட்டபடி சர்க்காரியா விசாரணை கமிஷன் அமைத்தது. சாட்சி சொல்ல எம்.ஜி.ஆர். வரவில்லை என்பது தனிக் கதை. எம்.ஜி.ஆரின் மக்கள் செல்வாக்காலும் வீழ்த்த முடியாத கருணாநிதி அரசை இந்திரா அரசு கலைத்தது. அவசர நிலை திமுகவை வதைத்தது. மத்திய அரசை என்றும் பகைத்துக்கொள்ளக் கூடாது என்ற முடிவுக்கு அப்போது எம்.ஜி.ஆர். வந்திருப்பார் என்றே சொல்லலாம்.

அண்ணா மறைவுக்குப் பின் நாவலரை முந்தி கருணாநிதி முதல்வராவதற்கு எம்.ஜி.ஆர். துணை நின்றார். பிரதிபலனாக திமுகவின் பொருளாளர் பதவி கிடைத்தது. ஒன்றாகப் பயணித்த இந்த இரு பெரும் ஆளுமைகள் ஒருகட்டத்தில் மெதுவாக விலகத் தலைப்பட்டனர். 1971 தேர்தலில் அசுர பலத்துடன் திமுகவும் கருணாநிதியும் ஆட்சிக்குத் திரும்பியிருந்தனர். எம்.ஜி.ஆர். அமைச்சராக விரும்பினார். நடிப்பதை விட்டுவிட்டு வருமாறு கருணாநிதி சொல்ல விரிசல் அதிகமாகியது.

பொருளாளர் என்ற முறையில் தேர்தல் செலவுகள் செய்யப்பட்ட விதத்திலும், 1972-ல் மு.க.முத்துவின் திரைப்பட வருகையிலும் எம்.ஜி.ஆருக்கு வருத்தம் இருந்தது. 1972 அன்று திருக்கழுக்குன்றத்தில் திமுகவினர் கணக்கு காட்ட வேண்டும் என்றார் எம்.ஜி.ஆர். இரண்டு நாட்களில் சஸ்பெண்ட், பின்னர் 14 அக்டோபர் விலக்கம் என்று எம்.ஜி.ஆர். கணக்கை முடித்து வைத்தது திமுக தலைமை.

1972 அக்டோபர் 18-ல் அதிமுக உருவானது. எம்.ஜி. ஆருக்குத் திரண்ட கூட்டம் அனைவரையும் மலைக்க வைத்தது. காமராஜர், "ஒரே குட்டையில் ஊறிய மட்டை" என்று எம்.ஜி.ஆரை விமர்சித்தார். ''சினிமா மாயை சில மாதங்களில் மறைந்து விடும்'' என்றது திமுக. கட்சி தொடங்கிய ஆறே மாதங்களில் எம்.ஜி.ஆரின்



திண்டுக்கல் தேர்தல் வெற்றி, திமுகவை விட காமராஜரைக் கலவரப்படுத்தியது. 1969-ல் காங்கிரஸ் காமராஜ் தலைமையில் ஸ்தாபன காங்கிரஸ், இந்திரா காங்கிரஸ் என்று ஏற்கெனவே இரண்டாகியிருந்தது.



1977 நாடாளுமன்றத் தேர்தலில் இந்திரா காங்கிரஸோடு களம் கண்டு வென்றவர், சட்ட மன்றத் தேர்தலில் தனியாகவே நின்றார். அதிமுக, இந்திரா காங்கிரஸ், ஜனதா, திமுக என்று நான்முனைப் போட்டியாக இருந்த அந்தத் தேர்தலில் 30.4 % வாக்குகள் பெற்று ஆட்சிக்கு வந்திருந்தது அதிமுக. இனி தமிழகத்தில் போட்டி என்பது திராவிட இயக்கங்களுக்கு மத்தியில்தான் என்று எம்.ஜி.ஆர். ஒரு புதிய வரலாற்றைப் படைத்திருந்தார். முதலமைச்சர் - எதிர்க்கட்சித் தலைவர் என்ற புதிய எம்.ஜி.ஆர். - கருணாநிதி உறவில் கனிவு, கசப்பு, கண்ணியம் அனைத்தும் சேர்ந்தே இருந்தன.

திமுகவும், இந்திரா காங்கிரஸும் 1980 நாடாளுமன்றத் தேர்தலில் கைகோத்தன. அதிமுகவுக்குக் கிடைத்தது இரண்டே இடங்கள் தான். எம்.ஜி.ஆரின் அரசியல் வாழ்க்கை முடிந்தது என்றே நாஞ்சில் மனோகரன் உட்பட பலரும் எண்ணினர். 1980 பிப்ரவரி 17 அன்று அவரது ஆட்சி கலைக்கப்பட்டபோது "நான் என்ன தவறு செய்தேன்?" என்று மக்களிடம் கேட்டார். மக்களும் அதை ஏற்றுக்கொண்டனர். திமுக - இந்திரா காங்கிரஸ் கூட்டணி வலிமையை அவர் தனியாகவே, பெரிய அளவு நிதி இன்றியும் சந்தித்தார். அதிமுக 38.8% வாக்குகள் பெற்றுச் சாதனை புரிந்தது.

எம்.ஜி.ஆரின் இரண்டாம் ஆட்சி இலவசங்களுக்கு வித்திட்டது. 1982-ல் ரூ.100 கோடி செலவில் அவர் கொண்டுவந்த சத்துணவு அவரை உச்சத்தில் கொண்டு நிறுத்தியது.

எம்.ஜி.ஆர். தமிழகத்தை ஒரு நலத்திட்ட மாநிலமாகவும், ஊரக வளர்ச்சியில் அக்கறை உள்ளதாகவும் மாற்றினார். 1982-ல் கட்சிக்குக் கைகொடுக்க ஜெயலலிதாவைக் கொண்டு வந்திருந்தார் எம்.ஜி.ஆர். ஜெயலலிதாவுக்குத் தரப்பட்ட அதீத மரியாதை மூத்த தலைவர்களைக் காயப்படுத்தியது. 1984 நவம்பர் எம்.ஜி. ஆர். உடல்நிலை கவலைக்கிடமாக ஆனது. கட்சியும் ஆர்.எம்.வீ., ஜெயலலிதா அணிகள் என்று இரண்டாகப் பிரிந்திருந்தது.



'நானும் பிரார்த்தனை செய்கிறேன்' என்று கருணாநிதி நண்பருக்காக இயற்கையை இறைஞ்சினார். இந்திராகாந்தி சுடப்பட்டு இறந்திருந்த பின்னணியிலும், எம்.ஜி.ஆர். நோய் வாய்ப்பட்டு அமெரிக்க மருத்துவமனையில் இருந்த பின்னணியிலும் நடந்த 1984 பொதுத் தேர்தலில் எம்.ஜி.ஆர். வென்றார். 'சாவுக்கும் நோவுக்கும் ஓட்டு' என்றார் கருணாநிதி.

எம்.ஜி.ஆரின் மூன்றாவது ஆட்சி 1985-ல் தொடங்கியது. உட்கட்சி சண்டை, ஈழப் பிரச்சினை, பேச முடியாத எம்.ஜி.ஆர். என்று நடந்தது நிர்வாகம். இம்முறை சட்ட மேலவை கலைப்பு, இந்தி எதிர்ப்புக்கு அரசியல் சட்டத்தைக் கொளுத்தியதற்காக திமுக சட்ட மன்ற உறுப்பினர்கள் பதவி பறிப்பு என்று ஒரு குறுகிய அரசியல் போக்கையே எம்.ஜி.ஆர். கொண்டிருந்தார். எனினும், இந்த மண்ணை ஒரு திராவிட இயக்கக் கோட்டையாக மாற்றியதில் எம்.ஜி.ஆரின் பங்கு யாராலும் மறக்கவோ மறைக்கவோ முடியாதது!

**- மவுரியன்**



# கமலின் விஸ்வரூப பயணம்

நடிகர் கமல் ஹாசன் 'நாளை நமதே' என்ற பெயரில் தனது அரசியல் பயணத்தை தொடங்க திட்டமிட்டுள்ளார்.

நடிகர் கமல் ஹாசன் தனது அரசியல் வருகையை கடந்தாண்டு உறுதி செய்தார். இதையடுத்து தனது நற்பணி மன்ற நிர்வாகிகள் உடன், தீவிர ஆலோசனையில் ஈடுபட்டு வருகிறார். வரும் பிப்ரவரி 21ஆம் தேதி கட்சி பெயரை அறிவித்து, அரசியல் சுற்றுப்பயணத்தை தொடங்க இருப்பதாக தெரிவித்துள்ளார்.

அன்று ராமேஸ்வரத்தில் உள்ள கலாம் வீட்டில் தனது அரசியல் பயணத்தை அச்சாரமிடுகிறார். இந்நிலையில் நடிகர் கமல் தனது அரசியல் பயணத்திற்கு 'நாளை நமதே' என்று பெயரிட்டுள்ளார்.

இதனை வார இதழ் ஒன்றில் தொடர் எழுதி வரும் கமல்ஹாசன் தெரிவித் துள்ளார். மேலும் அரசியல் பயணத்தின் தொடக்கமாக, கிராமம் ஒன்றை தத்தெடுத்து மேம்படுத்தப் போவதாக குறிப்பிட்டுள்ளார்.

மாணவர்களால்தான் மாற்றத்தை கொண்டுவர முடியும் என நடிகர் கமல் ஹாசன் கூறினார். ஓட்டு போடும்போது 'நோட்டா' பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

மாணவர்கள் எல்லாம் ஒதுங்கி இருப்பதால்தான் இந்த நிலைக்கு நாம் ஆளாகி இருக்கிறோம். நீங்கள் ஒதுங்கி இருக்கக் கூடாது.

அரசியலுக்கு நீங்கள் வரவேண்டும். என்னுடன் வரணும்னுகூட கேட்கல. தயவு செய்து அரசியலுக்கு வாங்க, வந்து உங்களோட சக்தியைக் காட்டுங்க. மாற்றம் தானாகவே வரும். நீங்கள் எதையும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. அரசியல் களத்தில் நீங்கள் ஆட்டக்காரராக இருக்க வேண்டும். மாற்றத்தை உங்களால் செய்ய முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதனால், இத்தனை மணல்களில் இந்த கருத்தை விதைக்கிறேன்.




இன்று முதல் நீங்கள் நாட்டு நடப்பு என்ன என்பதை தெரிந்துகொள்ளுங்கள். யார் கொள்ளையர்கள் என்பதை புரிந்து கொள்ளுங்கள் அது உங்கள் கடமை. எதனால் உங்கள் வீட்டில் தண்ணீர் வரவில்லை என்பதை புரிந்துகொள்ளுங்கள். ஏன் கல்வி நிலை இன்னமும் உயரவில்லை. உங்களுக்கு கிடைத்த இந்த வாய்ப்பு எல்லா குழந்தைகளுக்கும் கிடைத்ததா என்று பாருங்கள். ஏன் கிடைக்கவில்லை என்று கோபப்படுங்கள்.



இப்படி ஆகி விட்டோமே என கவலைப்பட்டு பிரயோஜனமில்லை. நாடு கெட்டுப் போச்சு, படிப்பு கெட்டுப் போச்சு, ரோடு கெட்டுப் போச்சு, கல்வி கெட்டுப் போச்சு என்று சொல்லிக் கொண்டிருந்தால் போதாது. அதற்கு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

அந்த மாற்றத்தை எங்கிருந்து செய்ய வேண்டும், அதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் யோசிக்க வேண்டும். விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். நாம் நமது நாட்டை பாதுகாக்கவில்லை யென்றால், நம் வாழ்க்கை சரியாக இருக்காது.

தரமான கல்வி, குடிநீர் வசதி செய்து தருவதே அரசின் கடமை. இதையெல்லாம் ஏற்பாடு செய்ய வேண்டிய அரசு, மது விற்றுக் கொண்டிருக்கிறது. அது வியாபாரம். அதை எந்த வியாபாரியும் எந்தத் திருடனும் செய்யலாம். எல்லாருக்கும் கோபம் வர வேண்டும்என்று கூறினார்.

**- ஆ. மவுரியன்**

# நீத்துப்போனதா நீதித்துறை?



**உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதிக்கு நான்கு நீதிபதிகளும் எழுதிய கடிதம், செய்தி ஊடகங்களுக்குத் தரப்பட்டது. அத்துடன் நீதிபதிகள் ஊடகங்களைச் சந்தித்துத் தங்களுடைய அதிருப்தியைத் தெரிவித்துள்ளனர்.**

*இதிலிருந்தே கடிதத்தில் எழுதப்பட்டதை விட, நிருபர்கள் கூட்டத்தில் தெரிவித்ததைவிட அவர்களுடைய குறைகள் தீவிரமானவை என்பது புலப்படுகிறது. 'பிரசாத் கல்வி அறக்கட்டளை' வழக்குதான் மூத்த நீதிபதிகள் தங்களுடைய அதிருப்தியை வெளிக்காட்டுவதற்கான தருணத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். அந்த வழக்கில் சில மனுதாரர்களே, உச்ச நீதிமன்றத்தின் மீது செல்வாக்கு செலுத்த சிலர் முயல்வதாகக் குற்றம்சாட்டியிருந்தனர்.*

அந்த வழக்கை விசாரிப்பதற்கான அமர்வை நீதிபதி சலமேஸ்வர் தெரிவித்திருந்தார். அதில் உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி இடம் பெறவில்லை. 'தலைமை நீதிபதி மீதும் குற்றச் சாட்டின் நிழல் படிவதால், அவரே விசாரிப்பது பொருத்தமாக இருக்காது' என்ற அடிப்படை யிலேயே அந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. அமர்வுகளைத் தீர்மானிக்கும் அதிகாரம் யாருக்கு என்பதில் நீதிபதிகளிடையே கருத்து வேறுபாடே கிடையாது. ஆனால், அந்த அதி காரம் எப்படிச் செலுத்தப்படுகிறது என்பதில் தான் கருத்து வேறுபாடு ஏற்பட்டிருக்கிறது.

உச்ச நீதிமன்றத்தின் நான்கு மூத்த நீதிபதிகள் பத்திரிகையாளர்களைச் சந்தித்து, தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா தொடர்பாகத் தங்களுடைய அதிருப்தியை வெளிப்படுத்தியது துரதிர்ஷ்டவசமான, அதேசமயம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு. நீதித் துறையின் உயர்நிலையில் இருக்கும் நீதிபதிகளிடையே கருத்து வேறுபாடுகள் எந்த அளவுக்குத் தீவிர மாக இருக்கின்றன என்பதை இது கோடி காட்டியிருக்கிறது. இந்த சர்ச்சையில் யார் செய்வது அல்லது சொல்வது சரி என்பது ஒருபுற மிருக்க, நான்கு மூத்த நீதிபதிகள் திடீரென உயர்த்திய இந்தப் போர்க்கொடியால் ஏற்பட்ட அதிர்வுகள் அவ்வளவு எளிதில் அடங்கிவிடாது என்பதையே தொடர் நிகழ்வு கள் சொல்கின்றன.

மூத்த நீதிபதிகள் ஜெ.சலமேஸ்வர், ரஞ்சன் கோகோய், மதன் பி.லோகூர், குரியன் ஜோசப் ஆகியோர் நிருபர்களைச் சந்தித்தாலும், கருத்து வேறுபாடுகளைத் தீவிரமாக்கிய பிரச்சினை களை வெளிப்படையாகவும் விரிவாகவும் தெரிவிக்கவில்லை. விசாரணைக்கான வழக்குகளை ஒதுக்குவதில் தனது விருப்ப அதிகாரத்தின் பேரில், சில வகை வழக்குகளை சிலருக்கு மட்டுமே ஒதுக்குகிறார் தலைமை நீதிபதி என்றே அவர்கள் கருதுகின்றனர் என்பது புரிகிறது.

கண்ணுக்குத் தெரியாத 'வெளிக்கை' ஒன்று இதில் இருப்பதாக அவர்கள் கருதுவது தெரிகிறது. எந்த வழக்கை, எந்தெந்த நீதிபதி களைக் கொண்ட அமர்வு விசாரிக்க வேண்டும் என்று தீர்மானிப்பது தலைமை நீதிபதியின் உரிமை என்று **1998**-ல் உச்ச நீதிமன்றத்தின் அரசியல் சட்ட அமர்வு, தீர்ப்பில் தெளிவுபடுத்தி யிருக்கிறது. இந்த நான்கு நீதிபதிகளும் அதை மறுக்கவில்லை. அந்தக் கருத்தை அப்படியே ஏற்கின்றனர். அதேசமயம், நீதித் துறை மீது சந்தேகம் எழும் வகையில், விரும்பத்தகாத முறையில் சில வழக்குகளைத் தலைமை நீதிபதி ஒதுக்குகிறார் என்று கூறியுள்ளனர்.

மிக கவனத்துக்குரிய ஒரு விஷயம்.

அடிப்படையில், இந்தப் பிரச்சினை நீதித் துறையின் உள் விவகாரம் என்றாலும், தேசத்தையே கவலை அடைய வைத்திருக்கும் விவகாரமும்கூட. நான்கு மூத்த நீதிபதிகள் இப்படித் தங்களுடைய அதிருப்தியைப் பகிரங் கப்படுத்த வேண்டிய அளவுக் குப் பூசல்கள் புரையோடிப் போயிருப்பதை இச்சம்ப வம் காட்டுகிறது. இனி, நீதித் துறைக்குள் பேசிப் பயனில்லை என்று சரியாகவோ - தவறாகவோ அவர்கள் முடிவு செய்துவிட்டதைத்தான் அவர் களுடைய பத்திரிகையாளர்கள் சந்திப்பு



காட்டுகிறது. உடனடியாக அனைத்து நீதிபதிகளும் பங்கேற்கும் கூட்டத்தைக் கூட்டி, அவர்களுடைய கருத்துகளைத் தலைமை நீதிபதி பொறுமையாகக் கேட்க வேண்டும். இனி, இப்படிப் பொதுவெளியில் நீதிபதிகள் தங்களுடைய அதிருப்திகளை வெளிப்படுத்தும் சூழல் உருவாகாத வகையிலான ஒரு முடிவை அவர் எடுக்க வேண்டும்.

குஜராத்தில் மோடி முதல்வராக இருந்த போது, போலி என்கவுன்டரில் சொராபுதீன் சுட்டுக் கொல்லப்பட்டதாக நடைபெற்றுவரும் வழக்கை விசாரித்து வந்த சிபிஐ நீதிபதி பி.எச்.லோயா, **2014**-ல் மர்மமான முறையில் இறந்தார். சொராபுதீன் கொல்லப்பட்டபோது, குஜராத்தில் காவல் துறைக்குப் பொறுப்பான உள்துறையின் அமைச்சராக இருந்தவர் இப் போதைய பாஜக தேசியத் தலைவர் அமித்ஷா.

எனவே, அவரை எதிரிகளில் ஒருவராக வழக்கில் சேர்த்திருந்தனர். பிறகு, அவருடைய பெயர் வழக்கில் இருந்து நீக்கப்பட்டது. அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த இந்த வழக்கு தொடர்பாகக் கவலை இருப்பதை நீதிபதிகள் வெளிப்படுத்தியிருப்பது, இந்த விவகாரத்தில்

ஜனநாயகத்தின் கலங்கரை விளக்கம்போலச் செயல்பட்டுவரும் நீதித் துறையின் அடியில் பரவும் கரிய நிழல் துரதிர்ஷ்டவசமானது. இந்நாட்டின் சாமானியர்களின் கடைசி நம்பிக் கையாக இருந்துவரும் நீதித் துறை தன்னுடைய இடத்தை ஒருபோதும் இழந்து விடக்கூடாது!

**- ராம்குமார்**



# நடுத்தர மக்களை நசுக்கும் விலைவாசி

பெட்ரோல், டீசல் விலை எப்போது ஏறுகிறது. எப்போது குறைகிறது என கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு தினமும் விலையேற்றம் நடந்து வருகிறது. கச்சா எண்ணெய்யை அதிகளவில் ஏற்றுமதி செய்யும் ரஷ்யா உற்பத்தியை குறைத்ததும், டாலரின் மதிப்பு சரிந்ததும் தற்போதைய பெட்ரோல், டீசல் விலை உயர்வுக்கு காரணமாக கூறப்படு கின்றன. கடந்த டிசம்பர் 14ம் தேதி முதல் மெல்ல மெல்ல ஏறிய விலையேற்றத்தில் தற்போது பெட்ரோல் லிட்டருக்கு 75 ஆகவும், டீசல் லிட்டருக்கு 66 ஆகவும் உயர்ந்துள்ளது. கடந்த 3 ஆண்டுகளில் இல்லாத விலை உயர்வு தற்போது நிகழ்ந்துள்ளதால் வியாபாரிகளும், பொதுமக்க ளும் அதிகளவில் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

சரக்கு கட்டணம் உயர்வும், அதன் தொடர்ச்சி யாக பொருட்களின் விலையேற்றமும் ஏழை, நடுத்தர மக்களை அதிகளவில் பாதித்து வருகிறது. உணவு பொருட்கள், காய்கறிகள் ஆகியன கூடுதல் விலையேற்றத்தை எதிர்கொண்டு வருகின்றன. மத்திய அரசு தனது கட்டுப்பாட்டின் கீழ் இருந்த குறிப்பிட்ட துறைகளை முன்பு மக்கள் சேவை அடிப்படையிலே பயன்படுத்தி வந்தது.

குறிப்பாக தபால், ரயில்வே, டெலிபோன் உள்ளிட்ட துறைகளில் இப்போது சேவையின் தரம் குறைக்கப்பட்டு, காலத்திற்கு ஏற்றாற்போல் அவை வியாபாரமயமாக காட்சியளிக்கின்றன. பெட்ரோல், டீசல் விலை நிர்ணயம் செய்வதிலும் அரசு இன்று வரை வியாபாரதன்மையையே கடைப்பிடிக்கிறது. மத்திய அரசு திட்டமிட்டே ஜிஎஸ்டி வரிவிதிப்பில் ரியல் எஸ்டேட் மற்றும் பெட்ரோல், டீசல் உள்ளிட்ட பொருட்களை கொண்டு வரவில்லை. அவ்வாறு கொண்டு வந்தால் பெட்ரோல், டீசல் விலை தற்போது விற்கும் விலையில் இருந்து பாதியாக குறைய கூட வாய்ப்புண்டு.

அதிகபட்ச ஜிஎஸ்டி வரியான 28 சதவீதம் விதிக்கப்பட்டால் கூட பெட்ரோல் லிட்டர் விலை 50ஐ தாண்ட வாய்ப்பில்லை. பெட்ரோல், டீசலை ஜிஎஸ்டி வரம்புக்குள் கொண்டு வர மாநில அரசுகள் எதிர்ப்பு தெரிவிக்கின்றன என பழிபோட்டுவிட்டு மத்திய அரசு தப்பித்து கொண்டது. இதன் விளைவு அன்றாடம் நடக்கும் தடாலடி விலையேற்றத்தால் சாமானிய மக்களே திண்டாடுகின்றனர்.

மத்திய, மாநில அரசுகள் தங்களது மூலதன வருவாயை பெருக்கிட எத்தனையோ வழிமுறை கள் உள்ளன. அவற்றை விடுத்து சேவை துறை களை வளம் கொழிக்கும் துறைகளாக மாற்ற முயல்வது ஆபத்தாகும். டோல்கேட் கட்ட ணத்தை குறைத்தாலே சரக்கு கட்டணம் ஓரள வுக்கு குறையும். எனவே பெட்ரோல், டீசல் உள்ளிட்ட எரிபொருள் விலை நிர்ணயத்தை ஜிஎஸ்டி வரம்புக்குள் கொண்டு வர மத்திய அரசு முயற்சிக்க வேண்டும். அப்போதுதான் அவற்றின் விலை கட்டுக்குள் நிற்கும்.

விலைவாசியையும் ஓரளவுக்கு குறைக்க முடியும். ஏழை, நடுத்தர மக்கள் நிம்மதியாய் தங்கள் வாழ்க்கையை நகர்த்த முடியும்.

– சிலம்பரசு



# நசுக்கப்படும் உரிமைக் குரல்கள்!

மதுரையில் வழக்கறிஞராகப் பணிபுரிந்து வரும் முருகன், குடியுரிமைப் பாதுகாப்பு மையம் என்ற அமைப்பின் தமிழகப் பொறுப் பாளராகச் செயல்படுபவர். கடந்த ஆண்டு கரூர் உளவுப் பிரிவு காவல் துறையினரால் கைது செய்யப்பட்ட கலா, சந்திரா என்ற இரண்டு நக்சல்பாரி செயல்பாட்டாளர்களுக்காக அவர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து வாதாடி வந்தார்.

இந்நிலையில், கடந்த ஜனவரி 8 அன்று வழக்கறிஞர் முருகன் வீட்டைச் சோதனை செய்த போலீஸார், மாவோயிஸ்ட் செயல்பாட்டாளர் என்று கூறி அவரைக் கைதுசெய்தனர். எந்த வழக்கில் அவர் வழக்கறிஞராக வாதாடி வந் தாரோ அதே வழக்கில் அவரும் ஒரு குற்றவாளி யாகச் சேர்க்கப்பட்டார். முருகன் தங்கள் இயக் கத்துடன் தொடர்பில் இருந்ததாககலாவும் சந்திராவும் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தாகக் காவல் துறை தரப்பில் கூறப்பட்டது. ஒரு வழக் கறிஞர், தனது கட்சிக்காரருடன் உரையாடும் உரையாடல் என்பது அந்த வழக்கறிஞருக்கும் அவரின் கட்சிக்காரருக்குமான அந்தரங்க உரை என்றே வகைப்படுத்தப்படுகிறது. நீதிமன்றத்தில் அதை ஒரு சாட்சியமாக சாட்சியச் சட்டம் ஏற்பதில்லை.

1992-ல் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த சிலருக்காக வாதாடிய டி.வீரசேகரன் என்ற வழக்கறிஞர் இதேபோல் கைது செய்யப் பட்டபோது 'ஒரு வழக்கறிஞருக்கும் அவரின் கட்சிக் காரருக்கும் இடையே உள்ள தனிப்பட்ட உரையாடல் (சாட்சியச் சட்டத்தில் 129 பிரிவு) குற்றமாகாது' என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்து அவரை விடுதலை செய்தது. ஆனால், முருகன் விஷயத்தில் இதெல்லாம் கண்டு கொள்ளப் படவில்லை. இதேபோல், கூடங்குளம் பகுதியைச் சேர்ந்த சூழலியல் செயல்பாட்டாளர்கள் மீது போடப்பட்ட பலவழக்குகளில் அவர்கள் சார்பில் வாதாடிவரும் இராசரத்தினம் (எ) செம்மணி யும் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்.

'ஒடுக்கப் பட்ட மக்கள் தொடர்பான வன்கொடுமை வழக்குகளில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளாத அதிகாரிகள் கடமையை தவறிய வர்கள்; குற்றவாளிகள்' என சட்டம் கருதுகிறது. அந்த அடிப்படையில் கீழமை நீதிமன்றத்தில் அப்பகுதி காவல் ஆய்வாளரையும் துணைக் காவல் கண்காணிப்பாளரையும் குற்றவாளிகளா கச் சேர்க்கக் கோரி ஒரு மனுவைக் கடந்த 3.11.2017 அன்று நீதிமன்றத்தில் தாக்கல்செய்தார் செம்மணி. அன்றைய இரவே பத்துக்கும் மேற் பட்ட காவலர்கள் நள்ளிரவில் அவரது வீடு புகுந்து கைதுசெய்து இழுத்துச் சென்றனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வேண்டி சட்டரீதியான நடைமுறைகளை மேற்கொள்ளும் வழக்கறிஞர்களுக்கே இந்தக் கதி என்றால், பாமர மக்கள் எத்தனை அபாயகரமான சூழலில் இருக்கிறார்கள் என்பதை உணர முடிகிறது. அரசின் செயல்பாடுகள் குறித்து விமர்சனம் செய்வதே குற்றம் என்று பார்க்கப்படும் சூழல் நிலவுகிறது. அச்சுறுத்தும் வகையில் வீடுபுகுந்து கைது நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அதிகாரவர்க்கத்தினரின் அடக்குமுறைக்கு எதிராகக் குரல் கொடுக்கும் வழக்கறிஞர்கள், சமூகச்செயல்பாட்டாளர்களை முடக்கும் செயல் களை அரசு எப்போது நிறுத்தப்போகிறது? எளியவர்களின் குரல்களை எதிரொலிக்கும் குரல்களை மௌனமாக்குவது எப்போதுதான் முடிவுக்கு வரும்?

**- ரமேஷ்குமார்**



# மருத்துவர்கள் இல்லா மருத்துவமனைகள்

**பகீர் ரிப்போர்ட்**

உலக சுகாதார நிறுவனத்தின் பரிந்துரைப்படி 1,000 பேருக்கு ஓர் அலோபதி மருத்துவர் இருக்க வேண்டும். ஆனால், 11,097 பேருக்குத்தான் ஓர் அலோபதி முறை மருத்துவர் என்கிற விகிதம் இந்தியாவில் காணப்படுவதாக 2017 தேசிய சுகாதார விவரக் குறிப்பு தெரிவிக்கிறது.

ஊரகப் புறங்களில் இந்த விகிதம் இதைவிட மோசம். 130 கோடி மக்கள் தொகை உள்ள இந்தியாவில் 60% மக்கள் ஊரகப் புறங்களில்தான் வாழ்கிறார்கள். அங்கே நோய்வாய்ப்பட்டவர்களுக்கு மருத்துவம் பார்ப்பதற்குப் போதிய மருத்துவர்கள் இல்லாத அவலம் நீண்ட காலமாகவே தொடர்கிறது. 2017-இல் நடத்தப்பட்ட ஆய்வின்படி உலக சுகாதார நிறுவனத்தின் பரிந்துரையான 1,000 பேருக்கு ஓர் அலோபதி மருத்துவர் என்கிற நிலைமை ஏற்பட வேண்டுமானால், 2030-குள் இந்தியாவுக்குக் குறைந்தது 20 லட்சம் மருத்துவர்கள் கூடுதலாகத் தேவைப்படுவார்கள்.

ஒருபுறம் சர்வதேச அளவிலான வசதிகளைக் கொண்ட கார்ப்பரேட் மருத்துவமனைகள் மாநகரங்களில் உருவாகி வருகின்றன. இன்னொரு புறம் ஊரகப் பகுதிகளில் அடிப்படைத் தேவைகளுக்குக்கூட மருத்துவரோ, மருத்துவமனையோ இல்லாத அவலம் காணப்படுகிறது.

இந்தியாவில் 10,189 பேருக்கு ஓர் அரசு மருத்துவர் என்கிற நிலைதான் காணப்படுகிறது. 2,046 பேருக்கு ஓர் அரசு மருத்துவமனையின் படுக்கை வசதி என்பதுதான் இப்போதைய நிலைமை. அதேபோல 90,343 பேருக்கு ஓர் அரசு மருத்துவமனை என்கிற விகிதம்தான் காணப்படுகிறது. இந்தியாவின் 70 கோடி மக்கள் வாழும் கிராமங்களில் 11,054 மருத்துவமனைகள்தான் இருக்கின்றன.

இந்தியாவில் நோயாளிகளின் எண்ணிக்கைக்கும், மருத்துவர்களுக்கும் இடையேயான விகிதம் என்பது வியத்நாம், அல்ஜீரியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் இருப்பதைவிடக் குறைவாகக் காணப்படுகிறது என்றும், மருத்துவர்கள் பற்றாக் குறைதான் இந்தியாவின் சுகாதார நிர்வாகம் எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவால் என்றும், 2016-இல் நாடாளுமன்றத்தின் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

மருத்துவப் பற்றாக்குறைதான் இந்தியாவின் பொது சுகாதார அமைப்புகள் முறையாகச் செயல்பட முடியாமல் முடக்குகிறது. குறிப்பாக, ஊரகப் புறங்களில், ஆதிவாசிகள் வாழும் மலைப்பிரதேச கிராமங்களில் மருத்துவ வசதி என்பது இன்னும் கானல் நீராகவே காணப்படுகிறது.

'இந்தியாஸ்பெண்ட்' என்கிற தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் ஆய்வு அறிக்கைபடி, ஊரகப் புறங்களில் உள்ள அரசின் பொது சுகாதார மையங்களில் 30,000க்கும் அதிகமான



மருத்துவர்கள் பற்றாக்குறை காணப்படுகிறது.

பல பொது சுகாதார மையங்களில் மருத்துவர்கள் இல்லாமல் செவிலியர்கள் மட்டுமே செயல்படும் அவலம் தொடர்கிறது. கடந்த 10 ஆண்டுகளில் மருத்துவர்கள் இல்லாத சுகாதார மையங்களில் 200% அதிகரித்திருப்பதாக அந்த ஆய்வறிக்கை தெரிவிக்கிறது.

அரசின் தேசிய அளவிலான சுகாதாரப் பாதுகாப்புத் திட்டங்களுக்கும் உண்மை நிலைக்கும் இடையேயான இடைவெளி மிக



அதிகமாக இருக்கிறது. தேசிய சுகாதாரக் கொள்கை 2017 பல உயரிய இலக்குகளை நிர்ணயிக்கிறது. இதன்படி பொது சுகாதாரத்திற்கான இந்திய அரசின் ஒதுக்கீடு இப்போது இருக்கும் 1.4% லிருந்து மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதத்தில் (ஜி.டி.பி.) 2.5%ஆக உயர்த்தப்பட வேண்டும் என்று கூறுகிறது.

மத்திய அரசின் தேசிய சுகாதார உறுதியளிப்புத் திட்டம் (நேஷனல் ஹெல்த் அஷ்யூரன்ஸ் மிஷன்) ரூபாய் 1லட்சத்து 60 ஆயிரம் கோடி ஒதுக்கீட்டில் 50க்கும் மேற்பட்ட மருந்துகளையும், 12க்கும் மேற்பட்ட பரிசோதனைகளையும் இலவசமாக வழங்கவும், 2019-க்குள் இந்தியாவிலுள்ள அனைத்து குடிமக்களுக்கும் மருத்துவக் காப்பீட்டை உறுதிப்படுத்தவும் முனைகிறது. இந்தத் திட்டத்தின் இன்னொரு பகுதியாக சிசு மரண விகிதத்தை 1000 பிரசவத்துக்கு 40 என்றிருப்பதை 30ஆகக் குறைப்பது என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

அரசின் முனைப்பும், இலக்கும் பாராட்டுக்குரியது என்றாலும் அதை எட்டுவது என்பது சுலபமானதாக இருக்காது. ஒவ்வொரு கிராமத்துக்கும் 3 கி.மீ. சுற்றளவில் போதிய மருத்துவ வசதி உருவாக்கப்பட வேண்டும். நமது மக்கள் தொகையைக் கணக்கில் எடுத்துக்கொண்டு மருத்துவ வசதிகளை உருவாக்குவது என்பது தனியார் மருத்துவ சேவைகளையும் சேர்த்துக் கணக்கிட்டாலுமேகூட எட்டுவது கடினம். இதை 2020-க்கான நிதி ஆயோகின் செயல் திட்டம் சுட்டிக்காட்டாமல் இல்லை.

இந்தியாவின் மிக முக்கியமான தேவை கூடுதலான மருத்துவர்கள். மருத்துவக் கல்விக்கு மிக அதிகமான முதலீடு தேவைப்படுகிறது. இந்தியாவில் உள்ள 462 மருத்துவக் கல்லூரிகள் 56,748 மருத்துவர்களை உருவாக்கிக் கொண்டிருக்கின்றன. ஆண்டொன்றுக்கு 2.6 கோடி மக்கள் தொகை அதிகரிக்கும் நிலையில் கல்லூரி எண்ணிக்கை போதுமானதாக இல்லை.

அதுமட்டுமல்லாமல் இந்தியாவின் சில பகுதிகளில் அதிகமான மருத்துவக் கல்லூரிகளும், சில பகுதிகளில் மருத்துவக் கல்லூரிகளே இல்லாத நிலையும் காணப்படுகின்றது. இந்திய மக்கள் தொகையில் 46% மக்கள் வாழும் எட்டு மாநிலங்களில் மொத்த மருத்துவக் கல்வி இடங்களில் 21%தான் உள்ளன. 31% மக்கள் தொகை உள்ள ஆறு மாநிலங்களில் 21% மருத்துவக் கல்வி இடங்கள்தான் காணப்படுகின்றன. சத்தீஸ்கர், ஜார்க்கண்ட் போன்ற பின் தங்கிய பல மாநிலங்களில் போதுமான மருத்துவக் கல்லூரிகள் இல்லாததால் மருத்துவர்களுக்கான குறைபாடு அதிகமாக இருக்கிறது.

தரமான மருத்துவக் கல்வி, தரமான மருத்துவர்கள், தரமான மருத்துவ வசதிகள் இவையெல்லாம் ஒரே நாளில் உருவாகிவிடக் கூடியவை அல்ல. சாமானியனுக்கு மருத்துவ வசதி என்கிற இலக்கு நிர்ணயிக்கப்பட்டால் மட்டும் போதாது. அதை எட்டுவதற்கான முனைப்பும் இருக்க வேண்டும். ஊரகப் புறங்களில் பணியாற்ற அடுத்த தலைமுறை மருத்துவர்கள் முன்வந்தால் மட்டுமே இந்தச் சவாலை இந்தியா எதிர்கொண்டு வெல்ல முடியும்!

**- வீ. அருணாசலம்**

# சிந்தனை முத்துக்கள்



## நித்தியானந்தா மடத்தில் 8500 பெண்கள் - செய்தி

பொண்ணு கிடைக்கல
பொண்ணு கிடைக்கிலன்னு
ஊர் ஊரா சுத்தினாடா எப்படி
பொண்ணு கிடைக்கும்....
BOYS NOTE THIS POINT..
I.T companies -ல கூட
இப்படி செலக்டிவா எடுக்க
மாட்டானுக... ●




## விலைவாசி

பைக்ல போய்க்கிட்டு இருந்தோம்
பெட்ரோல் விலையை ஏத்துனாங்க...
சரி பஸ்ல போலாம்னு பார்த்தா
டிக்கெட் விலையும் ஏத்திட்டாங்க...
நடந்தே போகலாம்னு இருக்கோம்
எவனும் குழிதோண்டி போட்ராதிங்கடா ●




## ஓட்டலில் ஒரு வாசகம்

வேண்டும் அளவு
கேட்டு வாங்கி
சாப்பிடுங்கள்!
வேண்டாதவைகளை
தவிர்க்கவும்,
உண்ணும் உணவை
சேதப்படுத்தாதீர்கள்
ஒரு பருக்கை சோறு
விவசாயியின்
ஒரு சொட்டு ரத்தம். ●

## கருத்துச் சித்திரம்

கருத்து:எஸ்.சுரேஷ்பாபு, நத்தம்.




- நன்றி தி இந்து

### பாவம் மக்கள்

பஸ் கட்டணத்தை உயர்த்திய
எந்த அரசியல்வாதியும்
பஸ்ல போகப்போறதில்லை...
ஊதிய உயர்வு பெற்ற
எந்த போக்குவரத்து
ஊழியரும் பஸ்ல டிக்கெட்
எடுக்கப் போறதில்லை...
பணக்காரன் எவறும்
பஸ்ல போகப்போறதில்ல...
பாதிக்கப்படப் போவது
என்னமோ
சாதாரண மக்கள்தான். ●

### வாட்ஸ்அப் ட்ரெண்டிங்

அய்யோ! இன்னும் எந்தெந்த துறை எல்லாம் நஷ்டத்தில இருக்கோ தெரியலேயே!



EBகாரன் வேற ரொம்ப நாளா நஷ்டத்தில் இருக்குன்னு சொன்னானே! அடுத்த அதிர்ச்சி என்னவா இருக்குமோ!

### லஞ்சம்

திருட தைரியமில்லாதவர்கள்
பிச்சை எடுக்கிறார்கள்.
பிச்சை எடுக்க
வெட்கப்படுகிறவர்கள்
திருடிவிடுகிறார்கள்.
இவ்விரண்டையும்
சேர்தே செய்ய
நினைப்பவர்கள்
லஞ்சம் வாங்குகிறார்கள் ●

### ஏன்?

பேருந்து கட்டண உயர்வைப் பற்றி நடிகர்கள் பேசாமல் இருப்பது ஏன்? திரையரங்கில் டிக்கெட் விலை உயர்ந்த நிலையில் குதி, குதியென குதித்த நடிகர்கள் எல்லாரும் பேருந்து கட்டணம் உயர்வுக்கு மக்கள் படும் அவதியைப் பார்த்து அமைதியாக இருப்பது ஏன்? இவர்களெல்லாம் நாட்டையாள வருவது, அத இந்த பாவப்பட்ட மக்கள் ஆதரிக்கிறதும்தான் வேதனையோ வேதனை ●

### விலைவாசி

மக்கள் :
என்னய்யா இப்படி
பஸ் கட்டணத்தை
அநியாயத்துக்கு
ஏத்திட்டிங்க?

அரசியல்வாதி :
நீங்க மட்டும்
100 ரூபாய்க்கு
வித்த ஓட்ட
6000 ரூபாய்க்கு
ஏத்தலையா? ●



# அபேஸ் ஆன ஆதார் ரகசியங்கள்!

யார் வேண்டுமானாலும் வெறும் 500 ரூபாய்க்கு இந்தியாவிலுள்ள எந்த ஒருவருடைய விவரத்தையும் பெற்றுக்கொள்ள முடியும் என்பது அதிர்ச்சி தரும் செய்தி. அரசின் இணையதளங்களிலிருந்து பல்வேறு தகவல்கள் அதிகாரப்பூர்வமற்ற முறையில் பெறமுடியும் என்பது கோடிக்கணக்கான இந்தியர்களை பாதித்திருக்கிறது. அதுமட்டுமல்ல, இதுபோன்ற தகவல் கசிவுகள் குறித்து இந்திய ஆதார் அடை யாள ஆணையத்திடம் வெளிப்படைத் தன்மை இல்லாமலிருப்பது அதைவிட அதிர்ச்சி அளிப்ப தாக இருக்கிறது.

இந்திய ஆதார் அடையாள ஆணையம் 2009-இல் அமைக்கப்பட்டது முதல் இந்தியக் குடிமகனின் அடிப்படை உரிமையான தன் மறைவு நிலை குறித்தும், தகவல் பாதுகாப்பு குறித்தும் கவலை எழுப்பப்பட்டு வருகிறது. எந்த அளவுக்கு பயோமெட்ரிக் அடிப்படையிலான தனிமனித அடையாளங்களைப் பதிவு செய்யும் ஆதார் அடையாளம் அரசால் வற்புறுத்தப் படலாம் என்ற கேள்வி குறித்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிறது.

கடந்த ஜனவரி 3ஆம் தேதி சண்டீகரில் இருந்து வெளிவரும் "தி ட்ரிப்யூன்' நாளிதழில் அந்தப் பத்திரிகை நிருபர் ஆதார் தகவல்கள் எந்த அளவுக்குப் பாதுகாப்பில்லாமல் இருக்கின்றன என்பது குறித்து ஒரு செய்தியை வெளியிட் டார். "பேடிஎம்' செயலி மூலமாக ரூ.500 செலுத்தி னால், அடுத்த பத்து நிமிடங்களில் ஆதார் தகவல்களைக் களவாடித் தரும் நிறுவனத்தின் முகவர், அத்தனை பாதுகாப்பு அம்சங்களையும்



சர்வ சாதாரணமாக உடைத்து உள்ளே நுழைவ தற்கான நுழைவுக் கணக்கை உருவாக்கித் தந்து விடுகிறார்.

அந்த நுழைவுக் கணக்கின் மூலம் அரசின் கைவசமுள்ள எந்த ஆதார் எண்ணிற்குள்ளும் நுழைந்து, அதில் தரப்பட்டிருக்கும் அத்தனை விவரங்களையும் பார்க்க முடியும். இதன் மூலம் பல எண்களுக்குள் அந்த நிருபரால் நுழைய முடிந்தது என்பது மட்டுமல்ல, தகவல்களையும் பெறமுடிந்தது. தனது அனுபவத்தை "தி ட்ரிப்யூன்' நாளிதழில் பதிவு செய்தார். ஆதார் எண்களுக்காகத் தரப்படும் தகவல்கள் எந்த அளவுக்குப் பாதுகாப்பற்றவை என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டியது அந்த நிருபரின் கட்டுரை.

பத்திரிகையில் செய்தி வெளியானவுடன், ஆதார் ஆணையத்திடம் உள்ள பயோமெட்ரிக் தகவல்கள் எதுவும் கசியவில்லை என்றும், தகவல் கள் அனைத்தும் பாதுகாப்பாகக் காப்பாற்றப்படு

கின்றன என்றும் இந்திய ஆதார் அடையாள ஆணையம் தெரிவித்தது. ஆனால், அந்த ஆணையத்தின் துணை இயக்குநர் ஒருவர் நிருபர் மீதும், பத்திரிகையின் மீதும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டிருக்கும் நபர்கள் மீதும் காவல் துறையில் புகார் தாக்கல் செய்தார். ஏமாற்றுதல், மோசடி, போலி ஆவணம் உருவாக்குதல் உள்ளிட்ட ஆதார் மற்றும் தகவல் தொழில்நுட்பச் சட்டங்களின் பல்வேறு பிரிவுகளின் கீழ் அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

இதுபோன்ற தகவல்கள் பத்திரிகையில் வெளிவரும்போது பொறுப்பான அரசின் துறை அந்தத் தகவல்களின் அடிப்படையில் எங்கே தவறு நடந்திருக்கிறது என்பதை கண்டறிய முற்பட வேண்டுமே தவிர, தவறு நடப்பதைச் சுட்டிக்காட்டும் பத்திரிகையாளர்களையோ, இடித்துரைப்பாளர்களையோ குற்றவாளியாக்க முற்படுவது விசித்திரமாக இருக்கிறது. தங்களது தவறை மறைப்பதற்காக, தவறை சுட்டிக்காட்டியவர்களையே குற்றவாளியாக்கும் அரசுத் துறையின் அணுகுமுறை தவறானது.

இதேபோன்ற பிரச்னையில் இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அணுகுமுறையை இங்கே சுட்டிக்காட்ட வேண்டும். உத்தரப் பிரதேச சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகளைத் தொடர்ந்து, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தின் செயல்பாடு குறித்த ஐயப்பாடு எழுப்பப் பட்டது. உடனடியாகத் தேர்தல் ஆணையம் எல்லா அரசியல் கட்சிகளுக்கும், சந்தேகத்தை எழுப்புபவர்களுக்கும் வாக்குப் பதிவு இயந்திரத்தின் செயல்பாட்டில் தவறை நிரூபிக்க வாய்ப்பளிப்பதாக அறிவித்தது.

தேர்தல் ஆணையத்துக்கு இருந்த தன்னம்பிக்கையும் வெளிப் படைத்தன்மையும் இந்திய ஆதார் அடையாள ஆணையத்துக்கும் இருக்குமேயானால், பத்திரிகையாளர் மீதும், பத்திரிகையின் மீதும் காவல்துறையில் புகார் தாக்கல் செய்வதற்குப் பதிலாக, அந்தப் பத்திரிகையாளரின் உதவியுடன் தவறு செய்பவர்களைக் கண்டுபிடித்து, சட்டத்தின் முன் நிறுத்த முற்பட்டிருக்க வேண்டும். ஆதார் அடையாள அட்டைகளுக்காகப் பெறப்படும் தகவல்கள் கசிந்துவிடாமல் இருக்க மேலும் என்னென்ன பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பது குறித்து யோசித்திருக்க வேண்டுமே தவிர, தவறைச் சுட்டிக்காட்டியவர்களின் வாயை மூடும் முயற்சியில் இறங்கியிருக்கக் கூடாது.




கடந்த அக்டோபர் 2016-இல், 6 முக்கியமான வங்கிகளின் 32 லட்சம் வாடிக்கையாளர்களுடைய வங்கிக் கணக்கு அட்டைகளின் விவரங்கள் பொதுவெளியில் கசிந்தன. கடந்த மே 2017-இல் 10 கோடிக்கும் அதிகமானவர்களின் ஆதார் எண்களின் விவரங்கள் (வங்கி வரவு-செலவு உட்பட) அரசு இணையதளம் மூலம் பொதுவெளியில் கசிந்தன. இப்போது "திட்ரிப்யூன்' நாளிதழ் மூலம் எந்தவோர் ஆதார் எண்ணின் விவரத்தையும் சர்வ சாதாரணமாக யார் வேண்டுமானாலும் பெற முடியும் என்கிற அதிர்ச்சி அளிக்கும் செய்தி வெளியாகி இருக்கிறது.

தீவிரவாதிகளைக் கண்காணிக்கிறோம் என்கிற பெயரில் தேவையில்லாமல் அத்தனை பேரின் விவரங்களையும் அரசு சேகரித்து, அதை முறையாகப் பாதுகாக்க முடியாமல் சட்ட விரோதிகளின் கையில் கிடைப்பதற்கு வழிகோலுகிறது. மானியங்கள் மடைமாற்றம் செய்யப்படாமல் முறையாகப் போய்ச் சேர வேண்டும் என்பதற்காக ஏற்படுத்தப்பட்ட திட்டம், ஏமாற்றுக்காரர்களுக்கும், மோசடிக் காரர்களுக்கும் பயன்படுகிறது.

ஆதார் அட்டையில் உள்ள தனிநபர் தகவல்கள் பொதுவெளியில் கசிந்துவிடாமல் பார்த்துக்கொள்ள ஐந்தடுக்குப் பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டிருப்பதாக இந்திய ஆதார் அடையாள ஆணையம் தெரிவிக்கிறது. "திட்ரிப்யூன்' செய்தி, அரசின் உத்தரவாதம் உண்மையல்ல என்பதை வெளிச்சம் போடுகிறது.

**- சரவணன்**

# சமூக வ(கொ)லை

ஏறத்தாழ 200 கோடி பேர் முகநூல் மூலம் மாதந்தோறும் இணைகிறார்கள் என்றால், அதன் தாக்கம் எப்படிப்பட்டதாக இருக்கும் என்பதை உணர்ந்து கொள்ளலாம். அதே நேரத்தில், முகநூல் என்கிற தொழில்நுட்ப பூதத்தைத் தவறாகப் பயன்படுத்தி, அதன் மூலம் பொய்ப் பிரசாரங்களையும், தனிநபர் பற்றிய அவதூறுகளையும் பரப்பும் அவலமும் அரங்கேறி வருகின்றது.

2015-16-இல் அமெரிக்க அதிபர் தேர்தலுக்கான பிரசாரத்தில் முகநூலை பயன்படுத்தி ரஷியா மறைமுகமான தாக்கத்தை ஏற்படுத்தியது என்கிற குற்றச்சாட்டு எழுந்திருக்கிறது. முகநூல், கூகுள், சுட்டுரை ஆகிய தொழில்நுட்பத் தளங்களின் மூலம் அந்நிய சக்திகள் பொய்யான செய்திகளைப் பரப்பி, தேர்தல் முடிவுகளை பாதித்தன என்கிற குற்றச்சாட்டை அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் எழுப்பினர். அதுமுதல் சமூக வலைதளங்களில் செய்யப்படும் பதிவுகளை எப்படிக் கண்காணிப்பது, ஒழுங்குபடுத்துவது என்பது குறித்த விவாதம் உலகளாவிய அளவில் எழுப்பப்படுகிறது.

இணையதளத்தின் அசுர வளர்ச்சி சமூக வலைதளங்களைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளைப் பின்தள்ளிக்கொண்டு விரைகிறது. அச்சு ஊடகம், காட்சி ஊடகம் போல அல்லாமல் எந்தவிதக் கட்டுப்பாடோ, வரைமுறையோ, தணிக்கையோ இல்லாமல், யார் வேண்டுமானாலும், எதை வேண்டுமானாலும் பதிவு செய்யும் உரிமையை சமூக வலைதளங்கள் வழங்குகின்றன. அதனால், தவறான செய்திகள் திட்டமிட்டு சமூக வலைதளங்களின் மூலம் பரப்புரை செய்யப்படுவதைக் கட்டுப்படுத்தவோ, தடுக்கவோ, கண்காணிக்கவோ இயலாது என்கிற நிலை காணப்படுகிறது.

சமூக வலைதளங்களில் செய்யப்படும் பதிவுகளுக்குப் பொறுப்பேற்பது யார் என்கிற கேள்வி எழுகிறது. பொய்யான பெயரில் மின்னஞ்சல் முகவரி ஏற்படுத்தி முகநூலில் உறுப்பினராகிவிட முடியும் என்பதால், இதில் செய்யப்படும் பதிவுகளுக்கு எந்தவித ஆதாரமோ, பொறுப்பேற்போ இருப்பதில்லை. அப்படி செய்யப்படும் முகநூல் பதிவுகளை சுட்டுரை மூலமும், கட்செவி அஞ்சல் மூலமும் பரப்புவதும் சாத்தியம். இதனால் எந்தவொரு தனிநபரின் பெயருக்கும் ஏற்படுத்தப்படும் களங்கத்தை சட்ட ரீதியாகக் கேள்வி கேட்க வழியில்லை.

அதே நேரத்தில் இதை சட்டம் போட்டுத் தடுக்கவோ, கட்டுப்படுத்தவோ அரசுகள் முயற்சிக்குமேயானால் அது தனிநபர் சுதந்திரத்தையும், கருத்துரிமையையும் பாதிப்பதாக அமையும். இந்தியத் தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் 66-அ பிரிவு, மாநில அரசுகளால் விமர்சனங்களுக்கு வாய்ப்பூட்டுப் போட பயன்படுத்தப்படுவதால், அதை ஏற்றுக்கொள்ளவும் முடியவில்லை. இதன் விளைவாக முகம் தெரியாத நபர்களால் சமூக வலைதளங்களில் பொய்யான தகவல்கள் பரப்புரை செய்யப்பட்டு, தேர்தல் முடிவுகளேகூட தீர்மானிக்கப்படும் அவலமும் ஏற்படுகிறது. இதற்கு விடை காண்பது எப்படி என்பதுதான் உலகளாவிய அளவில் நடைபெற்றுவரும் விவாதம்.

சமூக வலைதளங்களின் செயல்பாடு உலகளாவிய அளவில் விவாதப் பொருளாக மாறியிருக்கிறது. நாடு, மொழி, இனம் என்கிற



வேறுபாடுகளை எல்லாம் அகற்றி உலக சகோத ரத்துவத்தை இணையம் மூலம் ஏற்படுத்தும் அறிவியல் அற்புதம் என்று கருதப்படும் சமூக வலைதளங்களுக்கு கோரமான முகமும் உண்டு என்பதைக் கடந்த சில ஆண்டுகளாக உலகம் பார்த்துக் கொண்டிருக்கிறது.

அரசியல் தலைவர்களுக்கு மக்களிடம் நேரடி யாகத் தனது செய்தியைக் கொண்டு செல்வதற்கு சமூக ஊடகங்கள் பயன்படுகின்றன. பல லட்சம் பேரிடம் நேரிடையாகத் தொடர்பு கொள்ளும் அதேநேரத்தில், அவர்களது கேள்விகளுக்கு பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை என்பது அரசியல் தலைவர்களைப் பொருத்தவரை வசதியாக இருக்கிறது. சமீபத்திய ஆய்வின்படி ஐ.நா. உறுப்பு நாடுகளில் 92% நாடுகள் சமூக ஊடகங்களில் பங்கு பெறுகின்றன.

178 நாடுகளுடைய அதிபர்களின் 856 சுட்டுரை கணக்குகள் அவர்களுக்கு 35.6 கோடி தொடர்புகளை ஏற்படுத்தித் தந்திருப் பதாக அந்த ஆய்வு தெரிவிக்கிறது.

முகநூல், கூகுள், சுட்டுரை, கட்செவி அஞ்சல் இவை அனைத்துமே லாப நோக்கத்துடன் நடத்தப்படும் தொழில்நுட்பத் தளங்கள். இவை விளம்பரதாரர் களுக்கு தங்களது வாசகர்களை, பயனாளிகளை, பார்வையாளர்களை விற்பனை செய்கின்றன. இந்த சமூக வலைதளங்களைப் பயன்படுத்து பவர்கள் குறித்த தகவல்கள்தான் அவர்களது விற்பனைப் பொருள்.



# தளங்கள்?

இவைபோன்ற சமூக ஊடகங்களுக்கு அதில் பங்குபெறும் நபர்கள் குறித்தோ, அவர் களது தன்மறைப்பு நிலை (பிரைவசி) குறித்தோ அக்கறை இல்லை. சமூக ஊடகங்களான முகநூல், சுட்டுரை, கட்செவி அஞ்சல் உள்ளிட் டவை தங்களது உறுப்பினர்கள் குறித்த சரியான விவரத்தைப் பெறுவதும் அவர்களது பதிவு களைத் தாங்களே கண்காணிப்பதும் தான் இதற்குத் தீர்வாக இருக்க முடியும்.

தனது வாடிக்கையாளர்களுக்குக் கண்கா ணிப்பின் மூலம் பாதுகாப்பு வழங்க முகநூல் நிறுவனம் தீர்மானித்திருக்கிறது. வாடிக்கை யாளருடைய படங்கள் மூன்றாவது நபரால் பயன்படுத்தப்படும்போது, வாடிக்கையாளரை எச்சரித்து, அந்தப் படங்களை அகற்றும் உரிமையை அவர்களுக்கு வழங்க முன்வந் திருக்கிறது. இதன்மூலம் போலியான தன்விவரக் குறிப்புகளையும், புகைப்படங்களையும் பயன் படுத்தி, முகநூல் உறுப்பினராவது தடுக்கப் படும். திரைப்பட நடிக-நடிகைகள் படங்களை யும், பெயர்களையும் தங்கள் முகநூல் அடை யாளமாக்குவது, பிரபல அரசியல் தலைவர்களின் பெயரில் முகநூல் உறுப்பினராக இருப்பது உள்ளிட்டவைக்கு முற்றுப்புள்ளி வைக்க இது உதவும்.

கருத்துப் பரிமாற்றத்திற்கு சமூக வலை தளங்களின் பங்களிப்பு அளப்பரியது. அதே நேரத்தில் தன்மறைப்பு நிலையையும், தனி மனித சுதந்திரத்தையும் பாதிக்கும், ஆதாரமில்லாத அவதூறுகளையும், திட்டமிட்ட பொய்யான பரப்புரைகளையும், எந்தவிதக் கட்டுப் பாடும் இல்லாமல் அனுமதிப்பது சரியா தவறா என்பதை சமூக வலைதளங் களைப் பயன்படுத்துவோர் சமூக வெளியில் விவாதித்து, முடிவெடுப்பது தான் தீர்வாக இருக்கும்.

**- இர்வீன்**

# அழிந்துவரும் காடுகள் திட்டமிட்ட அயல்நாடு சதி!

✡ அதிர்ச்சி ரிப்போர்ட்

பிரிட்டிஷ் காலனி ஆட்சியில், மூங்கிலை மரம் என்று வகைப்படுத்தி இந்திய வனச்சட்டம் 1927-இன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததற்கு ஒரு காரணம் இருந்தது. அப்போது காட்டிலுள்ள மரங்கள் வனக் கொள்ளையரிடமிருந்து காப்பாற்றப்படுவதற்குக் கடுமையான சட்ட விதிமுறைகள் தேவைப் பட்டன. மூங்கில் அதிகமாகக் காடுகளில் விளைவதால் அதையும் தேக்கு, கருங்காலி, சந்தனம், ஈட்டி உள்ளிட்ட கட்டுமானப் பணி களுக்குப் பயன்படுத்தப்படும் ஏனைய மரங் களுடன் இணைத்து வகைப்படுத்திவிட்டார்கள்.

இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு இந்த வகைப்படுத்தலை அகற்ற வேண்டும் என்கிற கோரிக்கை எழுந்தது. ஆனாலும்கூட வனத்துறை யினரும், அரசு அதிகாரிகளும் மூங்கில் ஒரு மரம் என்பதால் வனத்துறையின் கட்டுப்பாட்டிலேயே தொடரட்டும் என்று பிடிவாதமாக இருந்தனர்.

'மரம்' என்று மூங்கில் அழைக்கப்பட்டாலும், தாவரவியல்படி அது புல் ரகத்தைச் சேர்ந்தது தான். ஆனால், அரசின் பார்வையில் இதுநாள் வரை அது ஒரு மரமாகத்தான் கருதப்பட்டது. அதற்குக் காரணம் பிரிட்டிஷ் காலனி ஆட்சியில் காடுகளில் விளைவதால் மூங்கிலை மரம் என்று வகைப்படுத்தி இருந்தார்கள்.

கடந்த வாரம் மக்களவையில் இந்திய வனச் சட்டம்-1927-இன் பிரிவு எண் 2(7)இல் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. மேலே குறிப்பிட்ட சட்டத்தின்படி மரம் என்கிற பிரிவைச் சார்ந்தது மூங்கில். அந்தச் சட்டத்தில் கொண்டு வரப்பட்டிருக்கின்ற திருத்தத்தில் அந்தப் பகுப்பு அகற்றப்பட்டிருக்கிறது.

இது வெறும் சம்பிரதாயம்போல தோன்ற லாம். ஆனால், இந்தச் சட்டத்திருத்தம் மிகப் பெரிய மாற்றத்திற்கு வழிவகுக்கும். மரம் என்கின்ற பிரிவிலிருந்து மூங்கிலை அகற்றி விட்டிருப்பதால்,வனத்துறைக்கு இந்த இயற்கை வளத்தின் மீதான அதிகாரம் அகற்றப்படுகிறது.

மூங்கில், வனத்துறையினரால் ஏலம் விடப்பட்டு அதன் மூலம் மட்டுமே சந்தைக்கு வருகிறது. மூங்கிலை சவுக்கு, யூகலிப்டஸ் உள்ளிட்டவைபோல பயிரிட்டு விவசாயம் செய்ய முடியாது. அப்படியே செய்தாலும் அதை வனத்துறையால் மட்டுமே ஏலம் விட முடியும்.



உலகச் சந்தையிலான மூங்கில் விற்பனை சுமார் 6,000 கோடி டாலர் (சுமார் ரூ.3.9 லட்சம் கோடி) அளவுக்குக் காணப்படுகிறது. மூங்கிலுக்குப் பரவலான தேவையும் உள்ளது. ஆனாலும் வனத்துறையின் கட்டுப்பாட்டில் இருப்பதால் இந்தியாவால் உலக அரங்கிலான மூங்கில் விற்பனையில் பங்கு பெற முடிய வில்லை. உலகத்தின் மொத்த மூங்கில் வனத்தில் சுமார் 30% இந்தியாவில் இருந்தும்கூட நாம் மூங்கிலை இறக்குமதி செய்கிறோம் என்கிற சோகத்தை யாரிடம் போய்ச்சொல்ல?

இந்திய தொழிலகக் கூட்டமைப்பு மூங்கில் குறித்து ஓர் ஆராய்ச்சிக் குறிப்பை வெளியிட் டிருக்கிறது. அதன்படி, இந்தியாவின் ஓராண்டு க்கான மூங்கில் தேவை 2.7 கோடி டன். ஆனால், உற்பத்தியோ வெறும் 1.3 கோடி டன் மட்டும். இந்தியாவில் சுமார் 1.4 கோடி ஹெக்டேர் பரப்பில் மூங்கில் வனங்கள் காணப்படுகின்றன. சர்வதேச மூங்கில் சந்தையில் இந்தியாவின் பங்கு வெறும் 4.5% மட்டுமே. 67 லட்சம் ஹெக்டேர் அளவிலான மூங்கில் வனம் கொண்டி ருக்கும் சீனா சர்வதேச மூங்கில் சந்தையில் 50% அளவிலான விற்பனையை மேற்கொள்கிறது.

வெட்டப்பட்ட மூங்கில் என்பது மரமல்ல என்று 1996-இல் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி யிருக்கிறது. அதேபோல, 2006-இல் கொண்டு வரப்பட்ட வனஉரிமைச் சட்டம், மரமல்லாத மலைவிளைபொருள் என்று மூங்கிலை வகைப் படுத்தி இருக்கிறது. மேலே குறிப்பிட்ட இரண்டு முடிவுகளுமே மூங்கிலை மரம் என்கிற பிரிவைச் சேர்ந்ததல்ல என்று தெளிவுபடுத்தி யிருந்தாலும்கூட, அதனால் மாற்றம் எதுவும் ஏற்பட்டுவிடவில்லை. காரணம், இந்திய வனச்சட்டம் 1927-இல் திருத்தம் ஏற்படுத்தாமல் மூங்கில் குறித்த குழப்பத்தை மத்திய அரசு நீட்டித்துக்கொண்டு இருந்தது.

கடந்த வாரம் கொண்டுவரப்பட்டிருக்கும் சட்டத்திருத்தம் மிகப்பெரிய மாற்றத்திற்கு வழிகோலும். காரணம், இனிமேல் மூங்கிலை விவசாயிகள் வியாபாரரீதியாக பயிரிடத் தொடங்குவார்கள். தேவைக்கு அதிகமாக விளைந்து காடுகளில் வீணாகும் மூங்கில்கள் இனிமேல் வனத்துறையின் தடையில்லாமல் வெட்டப்பட்டு விற்பனைக்குக் கொண்டு வரப்படும்.

அதுமட்டுமல்லாமல், இந்தியக் காடுகளில் அளவுக்கு அதிகமாக காணப்படும் மூங்கில்கள் அவ்வப்போது ஒன்றுக்கொன்று உரசி காட்டுத்தீ உருவாகும் அவலம் குறையும். மூங்கில் ஒன்றுக் கொன்று உரசி அதனால் காட்டுத்தீ உருவாகும் போது, 50 ஆண்டுகள், 100 ஆண்டுகள் வயதுள்ள விலை மதிக்க முடியாத பல மரங்கள் கருகிச் சாம்பலாவது தடுக்கப்படும்.



இந்தியாவிலுள்ள 1.4 கோடி ஹெக்டேர் மூங்கில் காடுகளில் பெரும்பாலான மூங்கில்கள் பயன்படுத்தப்படாமல் காய்ந்து வீணாகின்றன. இந்த மூங்கில்கள் சரியான பருவத்தில் அவ்வப் போது வெட்டப்படும்போது அதன் விளைவாக சந்தைக்கு மூங்கில்கள் வருவது மட்டுமல்லாமல், மூங்கில் உற்பத்தியும் அதிகரிக்கும்.

காடுகளில் உள்ள ஏனைய மரங்களுக்கும் மூங்கிலுக்கும் மிகப்பெரிய வேறுபாடு உண்டு. பல அன்றாட உபயோகங்களுக்குத் தேவைப் படும் ஏனைய மரங்கள் வளர்ந்து பயன்பாட் டுக்குத் தயாராவதற்கு குறைந்தது ஐந்து முதல் பத்தாண்டுகள்வரையில் தேவைப்படும். ஆனால், ஒரு மூங்கில் குருத்து உயர்ந்து வளர மூன்று முதல் ஐந்து மாதங்கள் போதும். வெட்ட, வெட்ட வளர்ந்துகொண்டிருக்கும் மூங்கில் பொருளாதார ரீதியாக மிகப்பெரிய பயனளிக்கும்.

அரை நூற்றாண்டுக்கு முன்னால் இந்தச் சட்டத்திருத்தம் கொண்டுவரப்பட்டிருந்தால், இந்தியாவுக்குப் பல்லாயிரம் கோடி டாலர் அந்நியச் செலாவணி கிடைத்திருக்கும். இப்போ தாவது மாற்றம் ஏற்பட்டிருக்கிறதே, அதை நினைத்து ஆறுதலடைவோம்.

**- அகிலாண்டேஸ்வரி**

# காணாமல்போன பேருந்து நிழற்குடை!

காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், அச்சிறுப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம், தேன்பாக்கம் கிராம ஊராட்சிக் குட்பட்ட தேசிய நெஞ்சாலையில், அரப்பேடு ஊராட்சி மன்றத்தால் பொது நிதியிலிருந்து கட்டப்பட்ட பொதுமக்களுக் கான பேருந்து நிழற்குடை தற்சமயம் காணாமல் போய்விட்டது.

காரணம் வசதி படைத்தவர்களும், வளமானவர்களும், வந்து தன் சகாக்களோடு ஒரு நேரம் அருந்தும் உணவின் விலை, ஏழைகள் ஒரு மாதம் உணவருந்தும் செல வாகும், காரில் பயணம் செய்து ஒய்வெடுக் கவும், உறங்கவும், ஊதாறித்தனத்துக்கும், ஏழைகள் கால்கடுக்க நிற்பதையும், மழை வெயிலில் இருந்து பாதுகாத்திடவும், அரப் பேடு ஊராட்சி நிதியிலிருந்து கட்டப்பட்ட பேருந்து நிலையத்தை இடித்து அதில் உயர் தர உணவகம் (ரெஸ்டாரண்ட்) அமைத்து அரசாங்கத்தையும் மக்களையும் அடிமுட்டா ளாக்கிய 99 ஒட்டல் உரிமையாளரின் திறமையோ திறமைதான்.

தேசிய நெஞ்சாலையில் அனுமதியின்றி விளம்பரப்பலகையும், ஆக்கிரமிப்பும் உணவகமும் யாரால் கட்டப்பட்டது, இதன் பின்னனி என்ன.?

இங்கு வரும் அரசு அலுவலர்கள் காவல் துறையினர்களுக்கு தனி கவனிப்பாம், அரசின் கட்டிடத்தை இடிக்கும் துணிச்சல் இவருக்கு எப்படி வந்தது, மக்களின் வரிப்பணத்தில் கட்டிய பேருந்து நிலையத்தை இடித்து அதில் ரெஸ்ரடாண்ட் கட்டுவதற்க்கு உரிமம் கொடுத்தது யார்?

இவ்வாறு தமிழக அரசு மக்களின் வரிப்பணத்தில் கட்டிய பேருந்து நிலையம் தற்சமயம் காணாமல் போய்விட்டதால்- மக்கள் புலம்பல் காணாமல் போன பேருந்து நிலையத்தை கண்டறிந்து தருமாறு மாவட்ட ஆட்சியரிடம் மக்களின் கோரிக்கை மனுக் கள் குவிப்பு, இதைப் பற்றி சம்பந்தப்பட்ட, அலுவலர்களிடம் இருந்து எந்தவித பதிலும் இல்லை.

மக்களுக்கான பேருந்து நிலையத்தை இடித்து அரசுக்கும், மக்களுக்கும் இழப்பும், நஷ்டமும், ஏற்படுத்திய தேசிய நெஞ்டு சாலையை ஆக்கிரமித்துள்ள இவர்களின் மீது நடவடிக்கை எடுப்பது யார்?

எனவே காணாமல் போன பேருந்து நிலையத்தை கண்டுபிடிப்பதற்கு காவல் துறை, தேசியநெடுஞ்சாலைதுறை, ஊரக வளர்ச்சிதுறைக்கு, உத்தரவு வருமா?

- A.C.**குமார்**





# தங்க திரு ஓ(ட்)டு

ஒரு ஊரில் ஒரு பிச்சைக்காரன் ஒருவன் இருந்தான். அவனுடைய சொத்து என்று பார்த்தால் அழுக்குப் பிடித்த உடை, கரிபிடித்த ஒரு பிச்சை ஓடு அவ்வளவுதான்.

இந்த சூழ்நிலையில் தினமும் அவன் அந்த பிச்சை ஓட்டை நீட்டி எல்லோரிடமும் பிச்சை கேட்பது வழக்கம். யார் வந்தாலும் பிச்சை கேட்பான். ஒருநாள், ஒரு துறவியிடம் போய், தன் பிச்சை ஓட்டை அவர் முகத்துக்கருகில் நீட்டி பிச்சைக் கேட்டான்.

முதலில் முகம் சுழித்த அவர், சற்று நிதானத்துக்கு வந்து, அவனையும், அந்த ஓட்டையும் மாறி மாறி பார்க்க தொடங்கினார்.

சட்டென்று, அவனிடமிருந்த அந்த பிச்சை ஓட்டை பிடுங்கினார். பிச்சைக்காரன் பயந்து போனான். துறவி தன் பிச்சை ஓட்டை எடுத்துக் கொள்வாரோ என்னு பயந்தான். ஆனால் அந்த துறவியோ அந்த ஓட்டை மேலும் கீழும் ஆராய்ந்தார்.

பிறகு பிச்சைக்காரனைப் பார்த்து "எவ்வளவு காலமா பிச்சை எடுக்கறே?" எனக் கேட்க, "நெனப்பு தெரிஞ்ச காலத்துல இருந்தே இதாங்க சாமி!" என்றான் பிச்சைக்காரன்.

இந்தப் "பிச்சை" ஓட்டை எவ்வளவு காலமா வச்சிருக்க? என அவர் மறுபடியும் கேட்க..

எங்க தாத்தா, அப்பான்னு இரண்டு தலைமுறைக்கு முன்னாடில இருந்தே இந்த ஓட்டை வச்சிருக்கோம். எங்க தாத்தா யாரோ ஒரு மகான்கிட்ட பிச்சை கேட்டப்போ அவர் இந்த ஓட்டைக் கொடுத்து, 'இதை வச்சுப் பொழைச்சிக்கோ' ன்னு குடுத்தாராம் என்றான்.

அந்த துறவி "அடப்பாவிகளா! மூணு தலைமுறையா இந்த ஓட்டை வச்சு பிச்சைதான் எடுக்கறீங்களா?" எனக் கோபமாக கேட்க.. பிச்சைக்காரனுக்குப் புரியவில்லை.

துறவி அமைதியாக அந்தப் பிச்சை ஓட்டை ஒரு சிறு கல்லினால் சுரண்டத் தொடங்கினார். பிச்சைக்காரன் துடிதுடித்துப் போனான்.

"சாமி..! எங்கிட்ட இருக்கற ஒரே சொத்து அந்த ஓ(ட்)டு தான். நீங்க பிச்சை போடாட்டியும்.... பரவால்ல. அந்த ஓட்டக் குடுத்துடுங்க சாமீ..!" என பரிதாபமாக கேட்க...

துறவி சிரித்துக் கொண்டே மேலும் வேகமாக அந்த ஓட்டை சுரண்ட தொடங்கினார். பிச்சைக்காரன் அழுதான். அங்கலாய்த்தான். "ராசியான ஓடு சாமி! மகான் கொடுத்த ஓடு சாமி. அதை சுரண்டி உடைச்சிடாதீங்க சாமி" என அலறினான்.

துறவியோ ஓட்டைச் சுரண்டிக்கொண்டே இருந்தார். சுரண்டச் சுரண்ட, அந்த ஓட்டின் மீதிருந்த கரியெல்லம் உதிர்ந்து, மெள்ள மெள்ள, மஞ்சள் நிறத்தில் பளீரிட்டுப் பிரகாசிக்க துவங்கியது தங்கம்...!

பிச்சைக்காரனின் கண்கள் அகலமாக விரிந்தது. இத்தனை நாள் தங்கத் திரு வோ(ஓ)ட்டிலா பிச்சையெடுத்து தின்றோம். அடக் கொடுமையே என தன்னையே நொந்து கொண்டான்.

ஓட்டின் அருமை தெரியாமல் அதை பிச்சையெடுக்க பயன்படுத்திய தன் முன்னோர்களை காறி துப்பினான். பிச்சைக்காரனின் கையில் அந்தத் தங்க ஓட்டைக் கொடுத்த துறவி மிகவும் வேதனையுடன் சொன்னார்!

"அந்த மகான் கொடுத்தத் தங்க ஓட்டை வச்சுக்கிட்டு இந்த ஊருலேயே பெரிய பணக்காரங்களா இருந்திருக்க வேண்டியவங்க நீங்க...

கடைசியில, அதை பிச்சை எடுக்க உபயோகப் படுத்திட்டீங்களேடா. இனியாவது ஓட்டை வைத்து ஒழுங்காக வாழுங்கடா" என்று திட்டிவிட்டு போனார்.

இன்றைய தமிழக மக்களும் அந்த பிச்சைக்காரன் போல தான்... இனுக்கிறோம். நம்மிடம் இருக்கும் தங்க திரு 'ஓட்டில்' பிச்சையெடுத்து வாழ்கிறோம்.

நாம் 'ஓட்டின்' மகிமையை என்று உணர்வோமோ, அன்றே தமிழகம் உருப்படும், உலகில் உயர்ந்து விளங்கும்.

(இந்த பதிவு பணத்துக்காக ஓட்டு)

முனைவர் ஆ.மவுரியன்


வீரத் தமிழச்சிகளின் வரலாறு..!

4



# உலகின் முதல் தற்கொலைப் போராளி தமிழச்சி "குயிலி"

சமூகத்தில் ஒரு எழுச்சியை ஏற்படுத்துவதற்காகவோ, ஒருவர் தம் உயிரையே அர்ப்பணிப்பாரெனில் அவரைத் தற்கொலைப்படைப் போராளி என்கிறோம்.

தற்கொலைப் போராளிகளின் தொடக்கம் இரண்டாம் உலகப் போரில்தான் என்கிறது எழுதப்பட்ட வரலாறு. ஜெர்மனிக்கும், ஜப்பானுக்கும் இடையே நீர்மூழ்கிக் கப்பலில் நடைபெற்ற யுத்தத்தில் ஜப்பானிய வீரர்களின் தற்கொலைப் போராட்டமே இதற்கான தொடக்கமாகக் கருதப்படுகிறது.

ஆனால்இரண்டாம் உலகப்போர் நடைபெறுவதற்கு 150 ஆண்டுகளுக்கு முன்னரே பிரித்தானியர்களை எதிர்த்துத் தமிழ் மண்ணில் நடைபெற்ற போர்க்களத்தில்தான் முதன்முதலாக 'தற்கொடைப் போராளி' உருவானார் என்பது நாம் அறியாதது. அந்த ஈகத்துக்குரிய வீரமங்கையின் பெயர் குயிலி. அவர் பெண் என்பதால் மட்டுமல்ல, சேரியில் பிறந்தவர் என்பதாலும் வரலாற்றின் பக்கங்களில் திராவிடத்தால் வஞ்சிக்கப்பட்டிருக்கிறார் என்பதை நமக்கு உணர்த்துகிறது.

18-ம் நூற்றாண்டில் ஆங்கிலேயர்களுக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடிய பெண் போராளி, குயிலி. பிறந்த மண்ணையும், வீர மங்கை வேலுநாச்சியாரையும் தன் உயிராக சபதம் கொண்டபோது குயிலிக்கும் வயது 18.

வேலு நாச்சியாரின் போர்ப் பயிற்சிக்கான ஆசிரியர்களில் சிலம்பு வாத்தியார் வெற்றி வேலு மிக முக்கியமானவர். வேலுநாச்சியாரை சிறுவயது முதலே கண்காணித்து வருபவர். வேலுநாச்சியார் தனது கணவருடன் தேனில வுக்காக மேற்குத் தொடர்ச்சி மலைக்குச் சென்றிருந்த சமயத்தில்கூட பாதுகாவலராக அரண்மனையால் அனுப்பப்பட்டவர் வெற்றிவேலு.

அதேபோல், தன் கணவரைப் பறிகொடுத்த பிறகு திண்டுக்கல் - விருப்பாச்சி பாளையத்தில் தங்கியிருந்து படை திரட்டிய கால கட்டத்தில் தன் மெய்க்காப்பாளராக வேலுநாச்சியார், சிலம்புவாத்தியார் வெற்றிவேலுவையே நியமித்திருந்தார். இவ்வளவு நம்பிக்கைக்குரியவராக விளங்கிய சிலம்புவாத்தியார் எதிரிகளால் விலை பேசப்பட்டார். வேலு நாச்சியாரின் திட்டங்களை, ஆதரவு சக்திகளை, அன்றாட நிகழ்வுகளை எதிரிகளுக்குக் காட்டிக்கொடுத்து வந்தார்.

அன்று ஒரு நாள் குயிலியின் தாயார் உடல் நிலை சரியில்லாத தால், குயிலி சிவகங்கைக்குச் செல்ல விருந்தார். இதை அறிந்த சிலம்பு வாத்தியார் "ஓ, பெண்ணே உனக்கு எழுதப் படிக்கத் தெரியுமா?" என்று வினவினார். குயிலிக்கு எழுதப் படிக்கத் தெரிந்திருந்தும் தெரியாது எனக் கூறினார். மிகவும் மகிழ்ச்சியடைந்த சிலம்பு வாத்தியார் ஒரு கடிதத்தைக் கொடுத்து சிவகங்கை அரண்மனைக்கு அருகிலிருக்கின்ற மல்லாரிராயன் என்பவரிடம் ஒப்படைக்கச் சொன்னார். அதற்கு ஈடாக கை நிறைய பணமும் கொடுத்தார்.

குயிலி, "தாயைப் பார்க்கப் போகத்தான்

போகிறேன். போகிற போக்கில் இக்கடிதத்தை எப்படியும் ஒப்படைத்து விடுகிறேன். பணம் வேண்டாம்" என மறுத்து விடுகிறார். புறப்படு வதற்கு முன்னதாக அன்று இரவு ஓய்வாக இருக்கும் நேரத்தில் கடிதத்தில் என்ன எழுதப் பட்டிருக்கிறது என்பதைப் படித்துப் பார்க் கிறார். வேலுநாச்சியாரின் அன்றாட அசைவு களையும், அவரை வீழ்த்திட அடுத்து எதிரிகள் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்தும் சிலம்பு வாத்தியார் அதில் குறிப்பிட்டிருந்தார்.

இராணியார் தன் தந்தையைப் போல பாவிக்கும் சிலம்பு வாத்தியாரா இப்படிக் காட்டிக்கொடுக்கிறார் என்பதை அறிந்து அதிர்ச்சியடைந்து ஆவேசமானார் குயிலி. குத்தீட்டியைக் கையில் எடுத்துக்கொண்டு சிலம்பு வாத்தியாரின் இருப்பிடம் விரைந்தார். அடுத்த நிமிடம் சிலம்பு வாத்தியாரின் குடிசை யிலிருந்து அலறல் சத்தம். இரத்த வெள்ளத்தில் மிதந்துகிடந்த சிலம்புவாத்தியாரின் உடலையும் அருகே ஒரு கையில் குத்தீட்டியோடும் மறு கையில் சிலம்பு வாத்தியாரின் கடிதத்தோடும் கண்கள் சிவக்க தலைவிரி கோலமாக நின்ற குயிலியையும் வேலு நாச்சியார் உள்ளிட்ட அனைவரும் கண்டார்கள்.

கடிதத்தை வாங்கிப் படித்த வேலுநாச்சி யாரின் முகம் உணர்ச்சியில் துடித்தது. நம்பிக் கைக்குரியவராக இருந்த சிலம்பு வாத்தியார் தன் காலைச் சுற்றியிருந்த நச்சுப்பாம்பு என அறிந்து வேலுநாச்சியார் அதிர்ச்சியுற்றார். தன் மீதும் நாட்டின் மீதும் கொண்ட பற்றின் காரணமாக ஒரு பெண் துணிச்சலாக மேற்கொண்ட செயலைப் பாராட்டினார். அன்றிலிருந்து கூட்டத்தில் பத்தோடு பதினொன்றாகப் பார்க்கப்பட்ட குயிலி அன்றிலிருந்து இராணி வேலுநாச்சியாரின் மெய்க் காப்பாளரானார்..

வேலு நாச்சியாரின் போர்ப்படையில் வாள் படை, வளரிப் படை, பெண்கள் படை ஆகிய மூன்றும் பிரதானமானவை. வாள் படைக்கு தலைமை ஏற்றவர் சின்னமருது, வளரிப்படைக் குத் தலைமை ஏற்றவர் பெரிய மருது. பெண்கள் படைக்குத் தலைமையேற்றவர்தான் குயிலி.

குயிலி தலைமையிலான பெண்கள் படைக்கு 'உடையாள் பெண்கள் படை' எனப் பெயர் சூட்டியிருந்தார் இராணி வேலு நாச்சியார். உடையாள் என்பவள் ஒரு மாடு மேய்க்கும் சிறுமி. காளையார் கோவிலில் தன் கணவரைப் பறிகொடுத்த வேலுநாச்சியார் அரியாக்குறிச்சி என்கிற ஊருக்கு அருகில் வரும் போது உடையாள் என்கிற மாடு மேய்க்கும் சிறுமி எதிர்ப்பட்டாள். அவளுக்கு விடை கொடுத்துவிட்டுச் சென்ற வேலு நாச்சியாரைப் பின்தொடர்ந்து வந்த எதிரிகள் உடையாளிடம் வேலுநாச்சியார் சென்ற பாதை குறித்துக் கேட்டபொழுது காட்டிக் கொடுக்க மறுத்தாள்.

ஆகவே, எதிரிகளால் தலை வேறு முண்டம் வேறாக உடையாள் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டாள். தமக்காக, தன் நாட்டுக்காக உயிரை ஈந்த உடையாளின் நினைவாகவே வேலுநாச்சியார் குயிலி தலைமையிலான மகளிர் படைக்கு உடையாள் மகளிர் படை எனப் பெயர் சூட்டியிருந்தார். மகளிர் படைக்குக் குயிலியை விடத் தகுதியானவர் வேறெவரும் இருக்க முடியாது என்பது வேலுநாச்சியாரின் இணையற்ற நம்பிக்கை

ஒரு நாள் இராணி வேலுநாச்சியாரும் அவரது மகள் வெள்ளை நாச்சியாரும் குயிலியும் அறையில் உறங்கிக் கொண்டிருந்த நேரம் அறைக்கு வெளியே காலடிச் சத்தம் கேட்டது. கேட்டும், கேட்காததுபோல் குயிலி படுத்துக் கிடந்தார். சன்னலைத் திறந்து நோட்டமிட்ட ஓர் உருவம் சட்டென வேலு நாச்சியார் படுத்துக் கிடந்த கட்டிலை நோக்கி சூரிக் கத்தியை வீசியது. பாய்ந்து தடுத்த குயிலியின் கையை கத்தி பதம் பார்த்தது. வலியால் அலறிய குயிலி யின் சத்தம் கேட்டு எழுந்த வேலுநாச்சியார் ரத்தம் வடிந்த குயிலியின் கையைப் பார்த்து அதிர்ச்சியுற்றார். ஒரு தாயின் அரவணைப்போடு குயிலியைக் கட்டி அணைத்துக் கைகளுக்கு முதலுதவி செய்து கொண்டிருந்தார். கத்தி வீசிய உருவமோ சிவகங்கையை நோக்கி ஓடிக்கொண்டிருந்தது.

இச்சூழலில் சிவகங்கைச் சீமையில் ஆற்காடு நவாப்பும் ஆங்கிலேயரின் கைக்கூலிகளான மல்லாரிராயனும், அவன் தம்பி ரங்கராயனும் குயிலியை மையப்படுத்தி சாதிவெறிக்குத் தூப மிட்டுக்கொண்டிருந்தனர். அதாவது மேல் சாதியைச் சார்ந்த சிலம்பு வாத்தியார் வெற்றி வேலுவை கீழ்சாதிப் பெண்ணான குயிலி குத்திக் கொலை செய்திருக்கிறார்.

**- அடுத்த இதழில்**

அதிக விளைச்சல் காரணமாகக்கூட விவசாயிகள் துயரத்தில் ஆழ்வது சமீப காலத்தில் முக்கியப் பிரச்சினையாக உருவெடுத்திருக்கிறது. கடந்த சில வாரங்களாக உருளைக்கிழங்கு விளைச்சல் அமோகமானதால் அதன் விலை படுமோசமாகச் சரிந்து, ஒரு கிலோவுக்கு ஒரு ரூபாய்கூட மொத்த விலைச் சந்தையில் கிடைக்காத நிலையை உருவாக்கியிருக்கிறது.

போக்குவரத்துச் செலவுக்குக்கூடக் கட்டுப்படியாகாததால் விளைந்த உருளைக்கிழங்குகளை நிலத்திலேயே விட்டுவிடும் விரக்தியான மனநிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டிருக்கிறார்கள். இந்நிலையில், விவசாயிகளுக்கு உதவ அரசு முன்வர வேண்டும்.

சில வாரங்களுக்கு முன்னால் தக்காளிக்கும், அதற்கும் முன்னால் வெங்காயத்துக்கும் இந்தக் கதி நேர்ந்தது. கடந்த ஆண்டு மிளகாய் வற்றல் (சிவப்பு மிளகாய்), துவரை, தக்காளி விளைச்சலின் போதும் விவசாயிகள் இப்படிப்பட்ட பிரச்சினைகளைச் சந்திக்க நேர்ந்தது. சந்தையில் எந்தப் பயிர் அதிக விலைக்கு விற்கிறதோ அந்தப் பயிரைச் சாகுபடிசெய்யவே எல்லா மாநில விவசாயிகளும் முற்படுகின்றனர்.

ஒரே சமயத்தில் அதிகம் விளைவதாலும் பெரும்பாலும் இவற்றை அதிக நாட்களுக்குக் கெடாமல் வைத்திருக்க இயலாததாலும் விலைச் சரிவுக்கு உள்ளாகின்றன. 2016-17-ல் 4.9% ஆக இருந்த விவசாய வளர்ச்சி 2017-18-ல் 2.1% ஆகக் குறையும் என்று அரசின் ஜிடிபி முன்கணிப்பு தெரிவிக்கிறது.

விவசாயிகளின் கடன் நிலுவையைத் தள்ளுபடிசெய்வது, குறைந்தபட்ச ஆதரவு விலையை உயர்த்துவது அல்லது இவ்விரண்டையும் சேர்த்து மேற்கொள்வது என்று சில மாநில அரசுகள் இறங்கக்கூடும். மத்திய அரசு அடுத்து அளிக்கவுள்ள பட்ஜெட்டில் கிராமப்புறப் பொருளாதார வளர்ச்சிக்குப் புதிய திட்டங்கள் அறிவிக்கப்படலாம்.

ஆனால், எந்தத் தற்காலிக நடவடிக்கையும் விவசாயிகளின் வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்திவிடாது. வேளாண் பொருட்களின் விலை ஆண்டுக்கு ஆண்டு, பருவத்துக்குப் பருவம் மாறிக்கொண்டே இருப்பதைத் தடுக்கும் நிரந்தரத் தீர்வு அவசியம்.

சாகுபடியாளர்களும் நுகர்வோரும் பாதிப்படைந்து, இடைத் தரகர்கள் கொழுக்கும் இப்போதைய நடைமுறை மாற்றப்பட வேண்டும். வேளாண் விளைபொருட்கள் சந்தைக்கு வருவதில் அரசு புகுத்தும் பல கட்டுப்பாடுகளும் இந்த நெருக்கடிக்குக் காரணமாக இருக்கிறது. நாடு முழுவதும் ஒரே சந்தை என்று அறிவிப்பதுடன் நில்லாமல், இணைய வழியாகவும் நிர்வாக ஆணைகள் மூலமாகவும் அவற்றை இணைக்க வேண்டும்.

வேளாண் விளைபொருட்களை விதைப்புக் காலத்திலேயே நல்ல விலை நிர்ணயித்துக் கொள்முதல் செய்துகொள்வதற்கான ஒப்பந்தங்கள் நடைமுறைக்கு வர வேண்டும். அத்துடன், சந்தையில் ஒரு சில வியாபாரிகள் சேர்ந்துகொண்டு, விளைச்சல் அதிகமாகிவிட்டால் விலையைக் குறைத்து வாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். இவர்களுடைய செல்வாக்கு நீக்கப்பட வேண்டும்.

விவசாய விற்பனைக் கட்டமைப்பையே திருத்தியமைக்க அரசு முன்வர வேண்டும். விவசாயிகளுக்கு நல்ல விலை மட்டுமல்ல, நிலையான விலையும் தொடர்ந்து கிடைக்க வேண்டும். வேளாண் துறையின் இந்தத் துயரம் மனிதாபிமானத்துடன் அணுக வேண்டிய பிரச்சினை. அரசு இதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்!

**- கே. பாலாஜி**

# விவசாயிகளை அரசு கைவிடக் கூடாது!



# நிருபர்கள் தேவை

**பத்திரிகைத் துறையில் சாதிக்கத் துடிக்கும்**
**துடிப்பான, உண்மையை வெளிக்கொணர**
**சேவை மனப்பான்மையுடன்**
**பணியாற்ற மாவட்ட வாரியாக**

## ஆண்/பெண் நிருபர்கள் தேவை

தொடர்புக்கு

## மக்கள் விசாரணை ✷ அருணை முரசு

## Cell : 93821 33334 / 93821 44446

**Email : writermouriyan@gmail.com**


**புகைப்படச் செய்தி**



*மக்கள் விசாரணை துணை ஆசிரியர் M.தரணி அவர்களின் வடபழனி எண்.10, சன்னதி தெருவில் உள்ள "ஐ லுக் டிஜிடல் ஸ்டுடியோ" 18-01-2018 வியாழன் அன்று கமலா திரையரங்கம் உரிமையாளர் C.T.கணேசன் அவர்கள் திறந்து வைக்க, மக்கள் விசாரணை ஆசிரியரும் தமிழ் பத்திரிகை எழுத்தாளர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளருமான முனைவர் ஆ.மவுரியன் அவர்களும், வடபழனி R8 காவல் நிலைய ஆய்வாளர் G.சந்துரு அவர்களும் சிறப்பு விருந்தினராக விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.*




# தட்டிக் கொடுத்த விக்ரம் நெகிழும் மாஸ் ரவி

விக்ரம் நடித்து பொங்கலுக்கு வந்துள்ள படம் 'ஸ்கெட்ச்.' இதில் விக்ரமுடன் மோதும் எதிர் தரப்பு அணியில் ஆர்.கே.சுரேஷின் தம்பியாக நடித்துள்ளவர் நடிகர் மாஸ் ரவி.

ஒரு பெரிய நடிகரான விக்ரம் படத்தில் நடித்ததில் தன் மேல் விளம்பர வெளிச்சம் விழுந்துள்ளதாகப் பரவசத்துடன் கூறுகிறார் மாஸ் ரவி.

**தான் கடந்து வந்த பாதை பற்றி அவர் கூறும்போது,**

"எனக்குச் சின்ன வயதிலிருந்தே சினிமா மீது ஆர்வம். டிவி யில் கூட ஒரு நாளைக்கு நாலைந்து படம் பார்க்கிற அளவுக்கு மோகம். எங்கள் ஊரிலிருந்து சினிமா தியேட்டருக்கு ஏழெட்டு கி.மீ. போக வேண்டும்.. நான் அந்த தூரத்தை நடந்தே செல்வேன். அப்படி நடந்து சென்றே பல படங்கள் பார்த்திருக்கிறேன்.

பள்ளியில் எக்ஸாம் இருந்தால் கூட படம் பார்க்காமல் இருக்க மாட்டேன். பள்ளி நாட்களில் சிவாஜி நடித்த "ஜிஞ்ஜினுக்கான்" பாட்டுக்கு நடனம் ஆடினேன். அதற்கு முதல் பரிசு கிடைத்தது. விருதும் கொடுத்தார்கள், 8 மேடையேற பயப்படுகிற எனக்கு அது ஊக்கமாக இருந்தது.

எனக்குள் சினிமா ஆர்வம் அதிகமாகவே, சென்னை வந்தேன். பலவிதமான இடங்களில் பலவிதமான வேலைகள் பார்த்தேன். எங்கு ஷூட்டிங் நடந்தாலும் வேடிக்கை பார்க்க ஓடி விடுவேன். அது டிவி சீரியலோ சினிமாவோ எதுவாக இருந்தாலும் போய்ப் பார்ப்பேன். பிறகு, சினிமா வாய்ப்பு தேட ஆரம்பித்தேன்.

எனக்கு உடம்பை கட்டாக வைத்துக் கொள்ளப் பிடிக்கும். எனவே ஜிம் போய் உடற் பயிற்சி செய்தேன். அங்கு நிறைய சினிமாக் காரர்கள் வருவார்கள். அந்தப் பழக்கத்தில் வாய்ப்பு தேடலாம் என்பதும் ஒரு காரணம். நிறைய பேர் வந்தார்கள். பழக்கமும் ஆனார்கள். ஆனாலும் பெரிதாக வாய்ப்பு ஒன்றும் வரவில்லை. பிறகு கம்பெனி கம்பெனியாக ஏறி வாய்ப்பு கேட்டேன். தினமும் 25 கம்பெனியாவது போவேன். இப்படி 1000 கம்பெனியாவது ஏறி வாய்ப்பு கேட்டிருப்பேன். சிறு சிறு காட்சிகளில் வந்த எனக்கு 'மாஸ்' படத்தில் அடையாளம் தெரிகிற மாதிரி சில காட்சிகளில் நடிக்க வைத்தார் வெங்கட் பிரபுசார்.

என்னை நம்பி பெரிய ரோல் கொடுத்தவர் சுப்ரமணிய சிவா சார் தான். அவர் 'உலோகம் 'என்கிற படத்தில் எனக்குப் பெரிய கேரக்டர் கொடுத்தார். அது ஜெயமோகனின் கதை. இலங்கைப் பின்னணியிலான கதை. படம் வந்தால் எனக்குப் பரவலான பெயர் கிடைக்கும். சுப்ரமணிய சிவா சாருக்கு மிக பெரிய நன்றி

வாய்ப்புக்குப் போராடுவதை விட நமக்கு நாமே ஏதாவது செய்து திறமையை வெளிப்படுத்த வேண்டும் என்று 'தாகம்' என்றொரு குறும்படம் எடுத்தேன். பலரும் பாராட்டினார்கள். பிறகு 'ஒன் லைக் ஒன் கமெண்ட்' என்றொரு குறும்படம் எடுத்தேன். அதைத் திரையிட்ட போது சந்தானம், சுப்ரமண்யசிவா, சரவண சுப்பையா போன்று திரையுலக விஐபிக்கள் பலரும் வந்தார்கள். பாராட்டினார்கள். அதற்கு விஜய் சந்தர் சாரை அழைத்து இருந்தேன். அவரால் வர முடியவில்லை. பிறகு அவரைச் சந்தித்த போது அதைப் பார்த்து விட்டுப் பாராட்டிப் பேசினார். வாழ்த்தி ஊக்கமாகச் சில

வார்த்தைகள் சொன்னார்.

அவர் தன் இயக்கத்தில் அடுத்த பட வாய்ப்பான 'ஸ்கெட்சி'ல் எனக்கு வாய்ப்பு கொடுத்தார். "என்றவர் 'ஸ்கெட்ச்' படத்தில் நடித்த அனுபவம் பற்றிப் பேசினார்." நான் 12 ஆண்டுகள் சினிமாவில் போராடி வருகிறேன். இந்திய அளவில் சிறந்த நடிகராக விருது பெற்ற விக்ரம் சாருடன் நடிக்கப் போகிறோம் என்பதை நினைத்துப் பெருமையாக இருந்தது. அப்படிப்பட்ட வாய்ப்பை வழங்கிய இயக்குநர் விஜய் சந்தர் சாரை நான் என்றும் மறக்க மாட்டேன். பத்து படங்களில் நடித்த அனுபவத்தையும் புகழையும் அந்த ஒரு படத்தின் மூலம் பெற்றேன். காரணம் இயக்குநர் தான். இன்றைய இளைய தலைமுறையை நடிப்பின் மூலம் கவர்ந்திருக்கும் விக்ரம் சார் பெரிய நடிகர் மட்டுமல்ல பெருந்தன்மைக்கும் சொந்தக்காரரர் என்பதை அவருடன் நடித்த போது நேரில் பார்த்த போது உணர்ந்து கொண்டேன்.

என் கேரக்டருக்கு யாரோ பெரிய நடிகரைக் கூட போட்டிருக்கலாம். என்னைப் போல ஒரு சிறிய நடிகனுடன் அவர் நடிக்கச் சம்மதித்தது பெரிய விஷயம். அது மட்டுமல்ல அவருடன் நான் சண்டைக் காட்சிகளில் மோதும் காட்சிகளில் நடிக்க சம்மதித்தது அவர் மனசால் எவ்வளவு உயர்ந்தவர் என்பதைக் காட்டியது. உடன் நடிக்கும் போதும் சகஜமாகப் பேசினார். ஒரு தம்பியைப் போல அன்பு காட்டி ஊக்கம் கொடுத்தார்.

படப்பிடிப்பின் போது எனக்குக் காலில் அடிபட்டு இருந்தது அதை மறைத்தபடி நடித்தேன். நிறைய டேக் வாங்கினேன் - ஏன் என்று விசாரித்தார் காலில் அடிபட்டு இருந்ததைச் சொன்னேன். ஏன் என்னிடம் இதை முன்னாடியே சொல்லவில்லை? என்றார். அப்போது தன் காலைக் காட்டினார். அதிலும் பேண்டேஜ் போட்டிருந்தார். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. 'ஸ்கெட்ச்' படத்தைப் பொறுத்தவரை அது எனக்கு மறக்க முடியாத அனுபவம். தாணு சாரின் மிகப்பெரிய கம்பெனியில் பெரிய ஹீரோவுடன் நான் நடித்து பொங்கல் படமாக வெளியாகி யிருப்பது எனக்கு பெருமையான விஷயம். ஏதோ கனவு போல நம்ப முடியாத சந்தோஷத்தில் இருக்கிறேன். " என்கிறார் மாஸ் ரவி.

இவர் நடித்து 'மறைந்திருந்து பார்க்கும் மர்மம் என்ன' படங்கள் வெளியாகவுள்ளன.

இப்போது சுப்ரமண்ய சிவா இயக்கத்தில் சமுத்திரக் கனியுடன் 'வெள்ளையானை' படம், திருமுருகன் இயக்கத்தில் ஒரு படம் என நடித்து வரும் மாஸ் ரவி, மேலும் 3 புதிய படங்களில் நடிக்க ஒப்பந்தமாகியிருக்கிறார். மாஸ் ரவி டைரக்‌ஷனில் அன்லாக் குறும்படம் விரைவில் வெளியாக உள்ளது இக்குறும்படத்தை பார்த்த பிரபலங்கள் பாராட்டி உள்ளனர் மாஸ் ரவிக்கு கூடுதல் மகிழ்ச்சி.

**- சச்சின்**


வாழ்க தமிழ்! வளர்க தமிழகம்!!

மக்கள் விசாரணை MAKKAL VISARANAI

# மக்கள் விசாரணை

மக்களின் மனக்குமுறல்

**லஞ்ச ஊழல் விழிப்புணர்வு**

ஆண்டு-6 பிப்ரவரி-2018 இதழ்-9

ஸ்ரீ திருமலை பப்ளிகேஷன் சார்பாக
வெளியிடுபவர் ஆசிரியர்
முனைவர் **ஆ. மவுரியன்,** B.A.,Dip. Journalism,

• ஆசிரியர் குழு
முனைவர் **காசி. அரங்கநாதன், A. காதர் மொய்தீன், V. அருணாச்சலம், A.C. குமார்**

• நிர்வாக ஆசிரியர்
**வீ. சிவசங்கர்,** B.B.A.,

• துணை ஆசிரியர்கள்
**ஆர்.ஆர். சண்முகவேல், கே. ரமேஷ்குமார், எஸ். சரவணன், பி. மாரிமுத்து, D. ரவி, M. தரணி, வீரஆறுமுகம், கே.பாலாஜி, அ.மு.ரமணாத்திரி**

• முதன்மை செய்தியாளர்கள்
**S. ராம்குமார்** சேலம் **M. சத்தியராஜ்,** நாமக்கல்.
**A. பாலகிருஷ்ணன், செந்தில்குமார்,** கோவை.
**R. ஜெயா, K. ஷமீம் ஷகிலா, P. சாந்தா,** தென்சென்னை
**யு. அக்ரம்கான், சுக்கூர்கான்,** கிருஷ்ணகிரி.
**பா. சுப்பிரமணியன்,** திருநெல்வேலி. **நாகராஜ்,** மூணாறு.
**மாரிமுத்து,** உளுந்தூர்பேட்டை. **சுசீ ஈஸ்வர்,** தென்காசி.
**ராமசுப்பிரமணியன்,** ராஜபாளையம். **சிலம்பரசன்,** தர்மபுரி.
**வெங்கடேசன்** தி.மலை **S. ரமேஷ், அ. சிவராமன்,** காஞ்சிபுரம்.

• நிருபர்கள்
**எம். நிவேதிதா, இர்வின், கனகதுர்கா, வ. சங்கர் அகிலாண்டேஸ்வரி, குருதேவ், சச்சின், ஏழுமலை, பிரவின், ஞானவேல், சத்தியமூர்த்தி, சதீஷ்குமார்**

• சட்ட ஆலோசகர்கள்
**M. குணசீலன்,** B.Com.,M.L.,
**M. சுதாகர்,** B.Sc.,B.L.,
(உயர்நீதிமன்றம், சென்னை.)

• புகைப்பட நிருபர்கள் :
**M. சந்தோஷ்சிவன், K. மணிவண்ணன்**

• இதழ் வடிவமைப்பு : **AKS Creative's**

அலுவலகம் :
**மக்கள் விசாரணை**
நெ.21/12, 2-வது சந்து, நடராஜ் பில்டிங் முதல் மாடி,
ஜார்ஜ் டவுன், சென்னை - 600 001.
Email : writermouriyan@gmail.com
news@makkalvisaranai.com / www. makkalvisaranai.com
**Cell : 93821 33334 / 93821 44446**

**Press & Registration of Book Act-in** ன்படி
செய்திகள் தேர்வுக்கு ஆசிரியர் மட்டுமே பொறுப்பாவார்.
எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள
நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது.



# என்ன தவம் செய்தேன்

தமிழ் என்றொரு சிறு விதை - அது
விருட்சமானது ஒரு ஆலமரம்.
ஆலமரத்திலே ஆயிரம் ஜாதி குருவிகள்
அது கத்தும் வார்த்தையோ
தமிழ் வாசம் - வாசம் நுகர்ந்த
பல பறவைகள் புயலிலும்
மழையிலும் தன் கூட்டை விட்டு
போகாத தமிழ் பற்று.

வள்ளுவன், பாரதி போல
பல எழுச்சி தமிழர்களுக்கு போதிமரம்.
தமிழினத்தின் பெருமைகளை
வான் புகழும் ஜெகமகிழும்.

பூவுலகில் புதியதாய்
பிறப்பெடுக்கும் பிறவிகளுக்கு
ஆலமரமாய் தமிழின் வரலாறு
யுகம் வாழ கண்டதுண்டு.

கண்ட கண்ட கருங்காலிகள்
தன் அலங்கார சமூகத்தாலும்
அவலமான கொள்கையாலும்
செய்த கோடரி கொண்டு
ஆலமரத்தை வீழ்த்தும் போதும்
கண்ணீர் சிந்தாமல்
கலையிழக்காமல் கம்பீரமாய்
துளிர் விட்டு - ஆயிரம்
மொழி பேசும் அயலவனுக்கும்
அடைக்கலமாய்
நிற்கிறது ஆலமரம்.

என்ன தவம் செய்தேன்
இப்பிறவியில் தமிழனாய்
பிறப்பதற்கு!

**- கவிஞர் நிவேதிதா**

கதைகளில் வரும் பெயர்களும், நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழ்களில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மை தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகள் எழுத்தாளர்கள் சொந்தக் கருத்துக்களே. Press & Registration of Book Act-in ன்படி செய்திகள் தேர்வுக்கு ஆசிரியர் மட்டுமே பொறுப்பாவார். எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது.

MAKKAL VISARANAI Owned and Published by A. Mouriyan, from 3, Anna Veethi 1st Street, MGR Nagar, Chennai - 600 078. Printed by : S.Ali Mohammad Syeed, at J.M.Process, 22/49, Subedhar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai-14. Editor. **A. MOURIYAN,**



# தோல் சம்பந்தப்பட்ட அனைத்து வியாதிகளுக்கும்

# சிறப்பு சிகிச்சை



ஆண், பெண் இருவருக்கும்
நீண்ட நாட்கள் குழந்தையின்மை,
நீர்க்கட்டி, தைராய்டு,
மாதவிடாய்க் கோளாறு,
வெள்ளைப்படுதல், ஆண்மைக்குறைவு,
உயிரணுக்கள் குறைபாடு,
ஆணிக்கால் நோய்கள்



**போன்ற அனைத்து நோய்களுக்கும்
ஹோமியோபதி மருத்துவ
சிறப்பு சிகிச்சை அளிக்கப்படும்.**


**Dr. M. BABU,** B.H.M.S.,
(Reg.No. 5497)
# 227, SAMUTHIRAM COLONY,
THIRUVANNAMALAI - 606 601.

**Cell : 7845531220 / 9487835905**
Email : babumunusamy3@gmail.com

MAKKAL VISARANAI Tamil Monthly Regd. No. TN/CC(S) DN/461/16-18
Registered with Registrar of News Paper for India Under No. TNTAM 44870/2012
Posted at EGMORE RMS / 1 Patrika Channel Posted Date of Publication 15th of Every Month

